# என்னுரை

இன்னா என்பது செய்யக்கூடாதது. செய்தால் துன்பம் தருவது எனக்கொள்ளத்தக்கது. இதன் ஆசிரியர் கபிலர். இவர் செய்யத்தகாதனவற்றை நாற்பது பாடல்களில் கூறியுள்ளார்.

கடவுளை வணங்காமை துன்பம். கணவனைப் புரிந்து கொள்ளாத மனைவியோடு உறவாடுவது துன்பம், இலக்கியங்களைப் புரிந்து கலைஞர்களைப் பாராட்டாத அறிஞர்கள் வசிக்கும் ஊரில் வாழுதல் துன்பம். உண்ணாமல் சேர்த்து வைக்கும் பணம் துன்பம். கள்ளுக்கடை இல்லாத ஊரில் வாழும் குடிகாரனுக்கு அவ்வூர் துன்பம். இப்படிச் சிறுசிறு செயல்கள் கூடத் துன்பமானவை என்று கபிலர் கூறுகிறார்.

சங்க காலத்தில் நடைபெற்ற போர்களால் சமூகத்தில் பல்வேறு விதமான சீர்கேடுகள் நடைபெற்றன. முக்கியமானது விபச்சாரமும் மதுப்பாவனையும் . இதனால் மக்கள் பட்ட துன்பங்களைக் கண்ட தமிழ்ப்புலவர்கள் ஒழுக்கத்தை வலியுறுத்திப் பலபாடங்களைப் பாடினார். அப்படிப் பாடப்பட்ட பாடல்கள் தான் இன்னா நாற்பது.

சங்க காலத்தில் நிகழ்ந்தைப் போல மிகவும் கொடிய போர் இலங்கையின் தமிழ்ப் பிரதேசங்கள் எங்கும் நிகழ்ந்தமையால் பலஅ னர்த்தங்கள் நிகழ்ந்தன. பலர் அங்கவீனர்களாயினர், பலர் தமது சொத்துக்களை இழந்தனர். பலர் தமது உறவுகளை இழந்தனர். ஒழுக்கம் முழுமையாகத் தவறியதால் நாட்டில் பல் இன்னல்கள் உருவாயின. படித்தவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. வேலையில் உள்ளவர்கள் பலவழிகளிலும் பாதிக்கப்பட்டனர். அதிகாரிகள் தமது விருப்ப்படி நடந்தனர். இதனால் மக்கள் பெரும் துன்பத்திற்குள்ளானார்கள்.. இப்படியான ஒரு நிலை சங்ககாலத்தில் உருவான போது புலவர்கள் நீதிநெறிகளையும் ஒழுக்கத்தையும் வலியுறுத்தும் இலக்கியங்களை உருவாக்கினார். அவ் இலக்கியங்கள் செய்யுள் வடிவினதாக இருப்பதால்

அவை யாருக்கும் விளங்கவில்லை. அதனால் அவற்றை இலகுபடுத்தி மக்களுக்குப் புரிய வைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டேன். அதன் பயனாக செய்யுள்களாக இருந்தால் இலக்கியங்கள் கதை வடிவாகின. இது வரை உரை எழுதுவதே கற்றறிந்தவர்களின் செயலாக இருந்தது. உதாரணமாகத் திருக்குறளை எடுத்துக் கொண்டால் லட்சக்கணக்கானோர் உரையெழுதியுள்ளனர். இருந்தபோதும் அதன் உட்கருத்தில் மாற்றம் ஏற்படுத்தாது சொற்களில் மாற்றத்தை ஏற்படுத்தினர். இந்நிலை இன்றும் உள்ளது. உரை எழுதுவது மிகச் சுலபம். சொற்களை இடம் மாற்றுதல், சொற்களை மாற்றுதல் தான் உரையாசிரியர்களின் நோக்கமாக இருந்தது. இந்நிலையை மாற்றி ஒவ்வொரு செய்யுள்களையும் கதைகளாக்கியுள்ளேன். அதை விமர்சிப்பாரில்லை. அதற்குக் காரணம் செய்யுள்களுக்கான உட்பொருள் விளங்காமை என்பதே எனது கருத்து. எனது ஆக்கங்களை KUNASEGARAM VAITHTHILINGKAM என்ற முகநூலிலும், KV KUNA.COM என்ற இணையத்தளத்திலும் வாசிக்கலாம். இதனைக் கணனிமயப்படுத்தி தந்த செல்வி கனகலிங்கம் - கல்ப்பனா அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கின்றேன்.

கே.வி. குணசேகரம்.
கோப்பாய் மத்தி,
ஸ்ரீலங்கா.
07.11.2015

## இன்னா நாற்பது

### கடவுள்வாழ்த்து

**முக்கண் பகவன் அடிதொழா தார்க்கின்னா**

**பொற்பனை வெள்ளையை உள்ளா(து) ஒழுகின்னா**

**சக்கரத் தானை மறப்பின்னா ஆங்கின்னா**

**சத்தியான் தான்தொழா தார்க்கு.**

முக்கண்ணனான சிவபெருமானது திருவடிகளைத் தொழாதவர்களுக்குத் துன்பம் உண்டாகும். அழகிய பனைக்கொடியை உடைய பலராமனைத் நினையாமல் இருத்தல் துன்பம். சுக்கரப் படையை உடைய மாதவனை மறத்தல் துன்பம். அதுபோல வேற்படையை உடைய முருகனது பாதங்களைத் தொழாதவர்களுக்குத் துன்பம்.

01. **பந்தமில் லாத மனையின் வனப்பின்னா**
**தந்தையில் லாத புதல்வன் அழகின்னா**
**அந்தணர் இல்லிருந்(து) ஊண்இன்னா ஆங்கின்னா**
**மந்திரம் வாயா விடின்.**

சுற்றமில்லாத இல்வாழ்க்கை துன்பமானது. தந்தை இல்லாத பிள்ளையின் அழகு துன்பமானது. துறவோர் வீட்டிலிருந்து உண்பது துன்பமானது. மந்திரங்கள் பலனளிக்கா விட்டால் துன்பம்.

காயத்திரி பிறந்தவுடன் அவனது தந்தை இறந்து விட்டார். அவனுக்கு ரகுவரன் இளமாறன் என்று இரு சகோதரர்கள். இருவரும் தீயவர்கள். தீய நண்பர்களுடன் கூடிக் குடிப்பார்கள். களவெடுப்பார்கள். ரகுவரனுடன் அவனது தீயநண்பர்கள் வீட்டுக்கு

வருவார்கள். காயத்திரி நல்ல அழகி. அவள் படிக்கும்போது நகுலன் என்ற இலைஞனை விரும்பினாள். நகுலன் பெருந்தனவந்தரின் மகன். அதனால் பெற்றோர் காயத்திரியை விரும்பாது வேறொரு பெண்ணைத் திருமணம் செய்ய விரும்பினர்.

ரகுவரன் தனது நண்பனான ஆருரனுக்குக் காயத்திரியைத் திருமணம் செய்து வைக்க விரும்பினான். அதைக் காயத்திரியின் தாயான சரஸ்வதி விரும்பவில்லை. அதனால் ரகுவரனுக்கும் தாய்க்கும் அடிக்கடி சண்டை ஏற்பட்டது. ரகுவரன் பலாத்காரமாகச் காயத்திரியை ஆரூருனக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பினான். அதை அறிந்த நகுலன் காயத்திரியை அழைத்துக்கொண்டு அயலூரில் உள்ள தனது உறவினரின் வீட்டுக்குச் சென்றான்.

அவனது உறவினன் கருணாகரன். பிரம்மச்சரி. தினமும் மூன்று வேளை சிவனுக்குப் பூசை செய்பவர் அத்துடன் சோதிடம் பார்ப்பார். பேய்பிசாசு விரட்டுவார். கழிப்புக்கழிப்பார். அதனால் எவ் வேளையிலும் அங்கு மக்கள் நிறைந்திருப்பர். அவர் பூசைகளுக்கெனச் செய்யப்படும் உணவு வகைகளையே உண்பார். நகுலனையும் காயத்திரியையும் தான் செய்யும் பூசைகளுக்கு உதவிகள் செய்யச் சொல்வார். அவர் பூசைக்கெனப் படைத்த உணவு வகைகளையே நகுலனையும் காயத்திரியையும் உண்ணச் சொல்வார். அவர்கள் விரும்பியவற்றைச் சமைத்து உண்ணமாட்டார். அதனால் நகுலனுக்கும் காயத்திரிக்கும் உணவில் வெறுப்பேற்பட்டது.

‘‘காயத்திரி, நீ தந்தையில்லாவிட்டால் பாதுகாப்பு இராது என்று பெரியவர்கள் கூறுவார்கள். உனக்குத்தந்தையிருந்தால் உனது சகோதரர்கள் இருவரும் தீயவர்களாக மாறியிருக்க மாட்டார்கள். அத்துடன் உன்னை அவர்கள் தீயவன் ஒருவனைத் திருமணம் செய்யுமாறு வற்புறுத்தியும் இருக்கமாட்டார்கள்.

அத்துடன் ஒவ்வொருவரும் தனித்தனி வீடுகளில் இருத்தல் வேண்டும். மாமாதுறவி. துறவியின் வீட்டில் இருப்பது துன்பம். அதைவிடத் துறவியின் வீட்டிலிருந்து உண்பது துன்பம். துறவிகள் பற்றற்றவர்கள். சுவையை வெறுப்பவர்கள். அதனால் பற்றுக்கள் உள்ள நாம் தனியே இருத்தல் வேண்டும். மாமா மந்திரங்கள் சொல்லி கழிப்புக்கள் கழிப்பார். மந்திரங்கள் சொல்லி பேய்பிசாசுகளை விரட்டுவார். சென்றவாரம் பேய்பிடித்த ஒரு பெண்ணுக்கு மந்திரங்கள் சொல்லி அப்பேயை விரட்ட முயற்சித்தார். பேயை விரட்டமுடியவில்லை. அதனால் அப்பெண்ணின் கணவனும் உறவினர்களும் வந்து மாமாவுடன் முரண்படுகின்றனர். அதனால் பெரும்கலகம் வரும்போல் உள்ளது. மந்திரங்கள் பலனளிக்காவிட்டாலும் துன்பம் தான். சில நாட்களாக உனக்குக் காய்ச்சல், சத்தி, தலைவலி போன்ற நோய்கள் வந்துள்ளன. அதைக் கவனிக்க யாரும் இல்லை. ஊரில் உனது தாயாரும் இனத்தவர்களும் துடிதுடித்துப் பரபரத்து ஆவன செய்வார்கள். சுற்றத்தார் இல்லாமல் வாழ்வது பெருந்துன்பம். நான் ஒருவீடு பார்த்திருக்கிறேன். அங்கு சொன்றாலும் பெரும் கஷ்டம் தான்'' என்று பெருமூச்சு விட்டான் நகுலன்.

**02. பார்ப்பார்இல் கோழியும் நாயும் புகல்இன்னா**
**ஆர்த்த மனைவி அடங்காமை நன்(கு) இன்னா**
**பாத்தில் புடைவை யுடையின்னா ஆங்கின்னா**
**காப்பாற்றா வேந்தன் உலகு.**

பிராமணனது வீட்டுள் நாயும் கோழியும் நுழைவ துன்பம். மனைவி கணவனுக்கு அடங்கி நடவாமை துன்பம். ஒரே

ஆடையைத் தொடர்ந்து அணிவது துன்பம். நல்ல மன்னனில்லாத நாடு எந்நாளும் துன்பப்படும்.

அதிகாலையில் கெங்காதரக்குருக்கள் நகுலனின் வீட்டுக்கு வந்து சொன்னார், ‘‘நகுலா , எனது வீட்டுள்பேரம்பலத்தின் வீட்டுக் கோழிகளும் நாயும் நுழைந்து விட்டன. கோழிகள் மலத்தை உண்ணும் கேடுகெட்ட பறவை. நாய் எறும்புகளைக் கொண்டு வந்து வீட்டுள்ப் போட்டுள்ளது. பிராயச்சித்தம் செய்த பின்பு தான் நான் வீட்டுள்ச் செல்ல முடியும். எட்டு மணிக்குச் சிவனுக்குப் பூசை செய்தல் வேண்டும். வழக்கமாக ஆறுமுகம் தான் வீட்டைக் கழுவித் தருவான். அவனது மனைவி கொடியவள். அவனுக்கு அடங்கி நடக்காதவள். அதனால் பெரும் சண்டை நடைபெறுகிறது. தயவு செய்து நீ வந்த வீட்டைக் கழுவ உதவி செய். பிராயச்சித்தம் செய்த பின்பு தான் வீட்டுள்ச் செல்லலாம். எட்டுமணிக்குச் சிவனுக்குப் பூசை செய்தல் வேண்டும்’’ என்று இரந்தார் குருக்கள்.

‘‘என்னைக் கூட்டிக் கொண்டு வந்த நாள்த் தொடக்கம் ஒரே வேட்டியைக் கட்டியுள்ளீர்கள். வீட்டிலிருந்து எதையும் எடுத்துவராததால் பெரும் துன்பமாக உள்ளது. பெரும்வசதி படைத்த நீங்கள் ஒருவாரகாலமாக ஒரே வேட்டியை அணிந்திருப்பதைப் பலருக்குத் துன்பமாக இருக்கிறது. நாளை வந்து வேட்டி வாங்கச் சொல்லியும் வாங்குகிறீர்கள் இல்லை’’ அழுதாள் காயத்திரி.

‘‘குடிகளைக் காப்பாற்ற முடியாத மன்னனை உடைய நாடு பெரும் துன்பப்படுவது போலப் பிள்ளைகளை ஒழுக்கமாக வளர்க்காத பெற்றோரும் துன்ப் படுவர். இப்போ உனது

தாயாருக்கு ரகுவரன் அடிப்பதாகக் கேள்விப்பட்டேன்” என்று கவலைப்பட்டான் நகுலன்.

**03. கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்தல் இன்னா**
**நெடுநீர் புணையின்றி நீந்துதல் இன்னா**
**கடுமொழி யாளர் தொடர்பின்னா இன்னா**
**தடுமாறி வாழ்தல் உயிர்க்கு.**

கொடுங்கோல் மன்னனின் ஆட்சியின் கீழ் வாழ்வது துன்பம். நீண்ட நீர்ப்பரப்பை நீந்திக் கடத்தல் துன்பம். வன்சொற்களைக் கூறுவோரின் நட்புத் துன்பம். மனத் தடுமாற்றத்தோடு வாழுதல் துன்பம்.

“இரக்கமில்லாத பெற்றோருடன் வாழ்வது கொடுங்கோல் மன்னனின் ஆட்சியின் கீழ் வாழ்வது போன்றது. கருவூர் மன்னன் கொடுங்கோவன் அவன்சிறிய குற்றங்கள் செய்தாலும் கடுமையான தண்டணைகளைக் கொடுப்பான். ஒருமுறை விவசாயி ஒருவன் வரிப்பணத்தை கூறிய தினத்தில் கட்டாததற்காக அவனது வயலில் உள்ள நெல்முழுவதையும் அறுவடை செய்து விட்டனராம். அதுபோல நான் விதைத்த வயலை அப்பா அறுவடை செய்து விட்டார். அத்துடன் எனது முதலாளியிடம் சென்று என்னை வேலையால் நிறுத்தும் படி எச்சரித்திருக்கிறார். அவர் நிறுத்தாதல் அவரை ஆள் வைத்து அடிப்பித்துவிட்டார். நான் என்ன செய்வது? எனது முதலாளிக்கு ஆற்றுக்கு அப்பால் ஒரு தொழிற்சாலை உண்டு. அதில் சென்று வேலை செய்யுமாறு சொன்னதால் அங்கு சென்று வேலை செய்து வருகிறேன். இன்று வேலை முடிய தாமதமாகி விட்டது. அதனால் படகு சென்றுவிட்டது. நானும் இன்னொரு தொழிலாளியும் அந்த பெரும் நீர்ப்பரப்பை நீந்தி தான் வந்தோம். சில இடங்களில் ஆழம்

அதிகம். நீர்ச்சுழிகளும் உண்டு. நீர்பாம்புகள் உண்டு. உயிரை கையில் பிடித்துக்கொண்டு தான் நீந்தி வந்தேன். இரவு வராவிட்டால் உனக்குத்துணை இல்லை. புதிய ஊர். அதனால் உறவினர்களோ நண்பர்களோ இல்லை. அதனால் மனம் பயப்பட்டது. அப்பா நானில்லாததை அறிந்திருந்தால் உனக்கு தீங்கு செய்யவும் முயல்வார். திருமணமானால் மகிழ்ச்சியடன் வாழ வேண்டும். வாழ்க்கையில் பரபரப்பு தடுமாற்றம் துன்பங்கள் சோதனைகள் வந்தால் வெறுப்பு ஏற்பட்டு விரக்தி வந்துவிடும். விரக்தி மனிதனை மரணத்தின் எல்லைக்கு கொண்டு சென்றுவிடும். எனக்கு பயமாக இருக்கிறது. துன்பங்கள் வந்துவிடுமென மனம் எச்சரிக்கிறது. அதனால் நின்மதியாக இருக்கமுடியவில்லை'' என்று கலங்கினான் நகுலன். காயத்திரி விம்மி விம்மி அழுதாள்.

**04. எருதுஇல் உழவர்க்குப் போ(கு)ஈரம் இன்னா**
**கருவிகண் மாறிப் புறங்கொடுத்தல் இன்னா**
**திருவுடை யாரைச் செறல்இன்னா இன்னா**
**பெருவலியார்க்(கு) இன்னா செயல்.**

எருதுகள் இல்லாத விவசாயிக்குக் குறைந்த ஈரம் துன்பம். படைகள் நிலைகுலைந்து ஓடுவது மன்னர்க்குத் துன்பம். செல்வம் உள்ளவர் போல கம்பீரமாக நடத்தல் துன்பம். பலசாலிகளிளோடு மோதுவது துன்பம்.

நகுலன் மிகுந்த துன்பத்துடன் வேப்பமரநிழலில் அமர்ந்திருந்தான். கர்ப்பவதியான காயத்திரி சிரமப்பட்டு மெதுவாக நடந்து வந்து அவனருகில் அமர்ந்தாள். அவனது முகம் காய்ந்து கறுத்திருந்தது.

போர்க்களத்திலே படைகள் நிலைகுலைந்து புறமுதுகிட்டு ஓடினால் மன்னனுக்கு பெரும் அவமானமும் துன்பமும் உண்டாகும். அவனால் எதையும் யோசிக்கவே முடியாது. அதுபோலதான் எனது வாழ்வும் வந்துவிட்டது. எனது உறவினர்களும் நண்பர்களும் என்னைக் கண்டதும் விலகிச் சென்றுவிடுகின்றனர். நடராசா எனக்கு பணம் தரவேண்டும். அவனைக் கேட்டுவரலாமென்று போனேன். அவன் அப்பாவுக்கு பயந்து என்னை வரவேண்டாமென்று கூறிவிட்டான். நான் கடன் காசைக் கேட்டேன். அதற்கு அவன் சொன்னான் “உனக்கு நான் கடன் காசைத்தந்தால் அதற்கு உன் தந்தை, நான் உனக்கு பணம் தந்து ஆதரிக்கிறேன் என்பார். அதனால் வீட்டுப்பக்கம் வராதே. நான் யாரிடமாவது கொடுத்து அனுப்புகிறேன்” என்றார். அப்பாவின் போக்குப் பிடிக்காதவர் நடராசா. அவர் என் மீது அன்புள்ளவர். என்னுடன் இன்றும் கதைத்தவர். பெரும் பணக்காரன். எந்தவேளையிலும் பட்டுப்பீதாம்பரம் அணிந்து செல்பவர். அவரிடம் நான் கொஞ்சப்பணம் கேட்டேன். காணும் போது உதவிகள் செய்வேன் என்றிருந்தார். உதவி செய்கிறாறில்லை. ஊரவன் ஒருவன் சொன்னான் நடராசாவிற்கு சாப்பிடவே வழியில்லை. ஆனால் பெரும் காசாளன் போல நடந்து கொள்வான், கதைப்பர். ஆனால் உதவிகள் செய்யமாட்டார். அதனால் பலதடவைகள் அவமானப்பட்டுள்ளார். இருந்தும் திருந்துவதாயில்லை” என்று சிரித்தான்.

“பெரும்பலசாலியுடன் சேருகின்ற பலவீனன் பலசாலியாவான். அந்தப் பலவீனனனோடு முரண்படுவது கேடு தரும் என்று எண்ணி, நான் அருணாசலத்தைக் கண்டால் மதிப்பளிப்பதுண்டு. முன்பு எனக்கு மரியாதை தந்து இருப்பான். நான் அவன் கேட்பதைக் கொடுப்பேன். இப்போ அவன் அப்பாவுடன் சேர்ந்து கொண்டு திமிரமாக நடக்கிறான். அன்று ஆற்றங்கரையில் என்னுடன் தேவையில்லாது முரண்பட்டான். அதை நினைக்க கவலையாக உள்ளது” என்று மனம் வருந்தினான் நகுலன். அவன் வருந்துவதைப் பார்க்க காயத்திரிக்கு துக்கமாக இருந்தது. கண்களால் கண்ணீர் வழிந்தது.

“வயலை உழவேண்டும். நிலம் காய்ந்துவருகிறது. எருதுகள் வைத்திருப்போரையும், உழவு இயந்திரங்கள் வைத்திருப்போரையும் கேட்டால் அவர்கள் கதைக்கிறார்களில்லை. வேலைக்கடுமை ஒருபக்கம், அப்பாவின் நெருக்கடி மறுபக்கம். அதனால் உழுது தருகிறார்கள் இல்லை. எருதுகள் இல்லாத உழவர்களுக்கு குறைந்த ஈரம் துன்பமானது” என்று கலங்கினான் நகுலன்.

**05. சிறையில் கரும்பினைக் காத்தோம்பல் இன்னா**
**உறைசேர் பழங்கூரை சேர்ந்தொழுகல் இன்னா**
**முறையின்றி யாளும் அரசின்னா இன்னா**
**மறையின்றிச் செய்யும் வினை.**

நகுலனுடன் வேலைசெய்யும் கதிர்காமநாதன் நகுலனைத்தேடி அவனிருக்கும் வீட்டிற்கு வந்தார். அவர்

வரும்போது தூறிக்கொண்டிருந்தமழை சிறிது சிறிதாகப் பெருத்து பெருமழையானது.

“நகுலா, நான் செய்யும் வேலையால் பெறும் சம்பளம் வாழ்க்கைச் செலவுக்கு போதாது. அதனால் இரவு வேளைகளில் தோட்டங்களுக்குக் காவலுக்குச் செல்வேன். நான் காவல்காக்கும் கரும்புத்தோட்டமுதலாளி சரியான கஞ்சான். கரும்புத்தோட்டத்தை வேலியில்லாமல் காப்பது பெரும் துன்பம். அவர் எத்தனை முறை சொல்லியும் வேலி அடைக்கிறார் இல்லை. இரவில் காட்டு மிருகங்கள் உள்ளே வந்து விடுகின்றன. பன்றி கரும்பை விரும்பித் தின்னும். கள்வர் இரவில் நுழைந்து கரும்புக்கட்டைகளை வெட்டி கட்டையாக கட்டி வைத்துவிட்டு தருணம் பார்த்து தூக்கிச்சென்று விடுகின்றனர். ஊர்ப்பிள்ளைகள் கரும்புச்சோலைக்குள் புகுந்து கரும்பை வெட்டி உண்டுவிட்டுச் சென்றுவிடுகின்றனர். வேலியிருந்தால் இவை நடைபெறாது. காவல் காப்பது இலகு. அதனால் நீயும் என்னுடன் வா. சம்பளம் வாங்கித்தருகின்றேன்” என்றான் கதிர்காமநாதன்.

“வீட்டுக்கூரையைப்பார் வானம் முழுவதும் தெரிகிறது. வீட்டுக்காரன் மேய்ந்து இருக்கச் சொன்னவன். அதற்கு காசு வேணும். இப்ப மூன்று தினங்களாக மழை பெய்கிறது. ஒழுகாத இடமில்லை” கவலைப்பட்டான் நகுலன்.

“நீ அவசரப்பட்டு காயத்திரியை அழைத்து வந்துவிட்டாய். பெரியவர்களிடம் ஆசியும், ஆலோசனையும் பெற்றுத் தான் திருமணம் செய்தல் வேண்டும். நல்லவர்களின் ஆலோசனைப்படி நடந்தால் தான் எதுவும் சிறக்கும். நான் காவல் காக்கும் கரும்புத்தோட்ட முதலாளிக்கு யாரும் நல்லது சொன்னால்

பிடிக்காது. அத்துடன் பெரியவர்கள் நல்லவற்றைச் சொன்னாலும் கேட்கமாட்டார். அதனால் அவர் செய்யும் காரியங்கள் பலவும் தோல்வியில் தான் முடியும். நீதியில்லாத அரசனின் ஆட்சியின் கீழ் யாவரும் மக்கள் படும் துன்பத்தைப் போன்ற துன்பத்தை நீதியில்லாத முதலாளியின் கீழ் வேலை செய்யும் தொழிலாளி அனுபவிப்பார் என்று எம்மோடு வேலைசெய்யும் பெரியவர் சொல்வர். அது உண்மை'' என்று சொன்னான் கதிர்காமநாதன்.

**06. அறமனத்தார் றும் கடுமொழியும் இன்னா**
**மறமனத்தார் ஞாட்பின் மடிந்தொழுகல் இன்னா**
**இடும்பை உடையார் கொடையின்னா இன்னா**
**கொடும்பா(டு) உடையார்வாய்ச் சொல்.**

சான்றோர் கூறும் கடுஞ்சொல்லும் துன்பம் தரும். வீரமுள்ள போரின்போது சோம்பியிருத்தல் துன்பம், வறியவர்களது ஈகைத்தன்மை துன்பம். தீயவர்களது வாய்ச்சொற்களும் துன்பம்.

“ நேற்று எனது வீட்டுக்கு வந்த எனது ஆசிரியர் என்னை ஏசிவிட்டார். அவர் மிகவும் நல்லவர். பல்வேறு விதமான அறிவு தரும் நூல்களைக் கற்றவர். நான்கேட்கும்போதெல்லாம் உதவிகள் பலவும் செய்பவர். எனது பிள்ளைகளின் கல்விக்கு உதவுபவர். நேற்று இளைய மகனின் பாடசாலைக்கட்டணத்தை நான் கட்டவில்லை. அதனால் பாடசாலை நிர்வாகம் அவனை வீட்டுக்கு அனுப்பிவிட்டது. அதனால் அவர் என்னை வாய்க்கு வந்தபடி திட்டி விட்டார்: “ பிள்ளைகளைப் பெற்றால் அவர்களை நல்லமுறையில் கவனிக்கவேண்டும். நீ எப்போதும் அசட்டையாக இருக்கிறாய். உனது போக்கைப் பார்த்தால் உனக்கு அவர்கள் கற்பது பிடிக்கவில்லை. அவர்களைக் கொண்டு உழைப்பிக்க

நிற்கிறாய்’’ என்று கூறிவிட்டார். என்னால் முடிந்தளவு உழைக்கிறேன். எனது குடும்பத்தைப் பார்க்கவேண்டும். பெற்றோருக்கு உதவ வேண்டும். எனது விதவைத்தங்கைக்கு உதவ வேண்டும். சான்றோராக இருந்தாலும் இதை உணரவில்லை. நான் என்ன குடிக்கிறேனா? சூதாடுகிறேனா?’’ கண்கலங்கினான் கதிர்காமநாதன்.

நகுலனுக்கு அவனைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. “ கதிர்காமு, ஏழைகள் இரங்குவதும் தானதர்மம் செய்வதும் துன்பமானது என்று பெரியவர்கள் சொல்வார்கள். உனது வருமானம் உனது வீட்டிற்கே போதாது. அப்படியிருக்க நீ மூன்று குடும்பங்களைப் பராமரிக்கின்றாய். அத்துடன் ஏழை எளியவர்களுக்கும் கோயில்களுக்கும் கொடுக்கிறாய். அப்படியானால் துன்பம் தான்’’ என்றான் நகுலன்.

‘‘போர்க்களத்தில் சோம்பியிருப்பது வீரனுக்குத்துன்பம் என்பார்கள். அதுபோல சமூகத்தில் வறியவர்களுக்கு இரங்காமல் இருப்பது நல்லவர்களுக்குத் துன்பம். யாராவது இறந்தால் நான் எனது குடும்பநிலையை மறந்து விடுகிறேன். நேரம் செல்கிறது நீ வா. எனது முதலாளி கொடியவன். நேரத்திற்குச் செல்லாவிட்டால் முன்பு செய்யாதவற்றையும் மறந்து கண்டபடி ஏசுவான். கொடியவர்களது வாய்ச்சொற்கள் மிகவும் துன்பம் தரக்கூடியவை. அதனால் வா’’ என்றான் கதிர்காமநாதன்.

**07. ஆற்றல் இலாதான் பிடித்த படையின்னா**
**நாற்றம் இலாத மலரின் அழகின்னா**
**தேற்றம் இலாதான் துணிவின்னா ஆங்கின்னா**

**மாற்றம் அறியான் உரை.**

வலிமையிலலாதவன் ஆயுதம் ஏந்துவது துன்பம். மணமில்லாத பூக்களின் அழகு துன்பம். அறியாத தொழிலைச் செய்வது துன்பம். சொற்களின் அர்த்தம் புரியாதவன் பேசுவதைக் கேட்டல் துன்பம்.

வலிமையில்லாத போர்வீரன் சம்பளத்திற்காக ஆயுதமேந்திப் போர்களத்திற்குச் செல்வது துன்பம். போர்க்களத்துக்கு மட்டுமல்ல வயலை உழ முடியாதவன் ஏரைப்பிடித்தாலும் அது துன்பம். வேலை தெரியாதவன் வேலை செய்வதும் வேலை செய்ய முடியாதவனைக் கொண்டு வேலை செய்விப்பதும் துன்பமானது. வாசமில்லாத பூவைச் சூடுவதும் சொல்லின் அர்த்தத்தை அறியாதவனின் பேச்சைக் கேட்பதும் துன்பம் இப்போ பென்கள் பிளாஸ்ரிக் பூக்கலைச் சூடுகிராார்கள். முழுமையான கருத்தை அறியாதவர்கள் மேடையில் ஏறிப்பேசுகிறார்கள். இதெல்லாம் துன்பமானவை என்று ஏன் சம்பந்த பட்டவர்களுக்குத் தெரியவில்லை. நேற்றிரவு ஆசிரியர் ஒருவர் கோயிலில் திருமுறைகளைப் பற்றி பேசினார். எனக்குத் தலை வலித்தது பெரியோர்கள் எழுந்து சென்று விட்டனர். பிள்ளைகள் ஓடி விளையாடினார்கள். இருந்தும் அதைப் புரியாது ஆசிரியர் பல மணி நேரம் பேசினார்.எனக்கு காவல் வேலை தெரியாது. அத்துடன் காயத்திரி தனிமையில் இருக்கிறாள். உறை முழுவதும் ஓடுகிறது. கவலைப்பட்டான் நகுலன்.

**08. பகல்போலும் நெஞ்சத்தார் பண்பின்மை இன்னா**
**நகையாய நண்பினார் நாரின்மை இன்னா**

**இகலின் எழுந்தவர் ஓட்(டு) இன்னா இன்னா**
**நயமில் மனத்தவர் நட்பு.**

நடுவு நிலைமையுடைய பெரியவர்கள் பண்பில்லாமல் நடத்தல் துன்பம். அன்புள்ளம் கொண்ட நன்பர்கள் உதவாதிருத்தல் துன்பம். போர் வீரன் புறங்காட்டி ஓடல் துன்பம் நீதியில்லாதவரோடு நட்பு வைத்திருத்தல் துன்பம்.

எனது தந்தையார் ஊருக்கு பெரியவர். அவர் எனது காதலுக்குத் தடை சொன்னதை நினைக்க எனக்குக் கவலையாக இருக்கு. காயத்திரி எனது தாய் மாமனின் மகள். அவள் பிறந்தன்றே உனக்கென அவரால் நிச்சயிக்கப்பட்டவள் .இப்போது இரு குடும்பங்கலுக்கிடையேயும் பகை கசப்பு ஏட்கட்டுவிட்டது. அதற்காகச் சொன்ன சொல தவரலாமா அவரது நடத்தயால் எவ்வளவு துன்பம் அத்தடன் உன் மீது அன்பு கொண்ட நன்பர்களையும் உறவினர்கலையும் அவர் எச்சரித்துள்ளார் அதற்கு பயந்து உனது நன்பர்கள் உனக்கு உதவுகிறார்களில்லை இது பெரும் துன்பமானது.இது போர்க்களத்திற்குச் சென்ற வீரன் ஒருவன் புறங்காட்டி ஓடுதலை விடத் துன்பமானது. நடுனிலையுடைய பெரியவர்கள், உயிர் நன்பர்கள், நீதியில்லாத நன்பர்கள் ஆகியோர் மாறுபாடடைதல் மிகவும் துன்பமானது. உனது நண்பன் ஆதவன் தீயவன். தனது நலத்துக்காக உன்னுடன் சேர்ந்திருந்தான். இப்போ உன்னிடமிருந்து எதுவும் பெறமுடியாத நிலையில் உனது தந்தையுடன் சேர்ந்து உனக்கு தீமைகள் செய்கின்றான். நீ எவ்வளவு கொடுத்திருப்பாய். அதை நினைக்க எனக்கே வேதனையாக இருக்கிறது. உனக்கு எப்படி இருக்கும். என்றான் கதிர்காம நாதன்.

**09. கள்ளில்லா மூதூர் களிகட்கு நன்கின்னா**
**வள்ளல்கள் இன்மை பரிசிலர்க்கு முன்னின்னா**
**வண்மை யிலாளர் வனப்பின்னா ஆங்கின்னா**
**பண்ணில் புரவி பரிப்பு.**

கள் இல்லாமை குடிகாரர்களுக்கு மிகவும் துன்பமானது. இல்லாமை பரிசு பெறுபவர்களுக்குத் துன்பம். ஈகைக்குணம் இல்லாதவரின் அழகு துன்பமானது. அது போலக்கடிவாளம் இல்லாத குதிரையில் சவாரி செய்வது செய்பவருக்குத் துன்பமானது.

“ஒருவர் விரும்புவது கிடைக்காவிட்டால் அது அவர்களுக்குத் துன்பமாகத்தான் இருக்கும். அதனால் தாம் விரும்புபவை நடை பெறும் என அவர்கள் மகிழ்ச்சியடைய மாட்டார்கள். கள்ளுக் குடிப்பவர்களுக்கு ஊரில் கள் இல்லாவிட்டால் துன்பம். இல்லாத ஊரில் யாரும் இல்லாததால் புலமை உள்ளவர்களுக்குத் துன்பம். அது போல ஈகைக் குணமில்லாதவரின் உருவ அழகு மற்றவர்களுக்குத் துன்பமாக இருக்கும். கடிவாளம் இல்லாத குதிரையில் சவாரி செய்வது சொல்பவர்களுக்குத் துன்பம். அது போலத்தான் சொல்வதைக் கேளாத பிள்ளை பெற்ற பெற்றோருக்குத் துன்பம். எனது தந்தை யார் தான் காயத்திரியை எனக்கு நிட்சயித்தவர். நாம் மனம் கலந்து ஒன்றாகிபட பழகிய பின் இடையில் விரோதப்பட்டு எம்மை பிரிக்க நினைத்து எனக்கு வேறோர் இடத்தில் பெண் பார்த்துத் திருமண நாலும் குறித்தார். இதை எப்படி ஏற்பது ஊரில் எனக்கும் குடிகாரனைப் போலவும் இல்லாத ஊரில் வாலும் புலவனைப் போலவும் சேணம் இல்லாத குதிரையில் பயணிக்கும் பயணி போலவும் நான் துன்பப் படுகிறேன். அதை விட ஈகைக்

குணமில்லாத கொடிய தனவந்தனைப் போல அப்பா தன் நிலை மறந்து எமக்குத் துன்பம் செய்கிறார் என அழுதான்” நகுலன்.

**10. பொருளுணர்வார் இல்வழிப் பாட்டுரைத்தல் இன்னா**
**இருள்கூர் சிறுநெறி தாந்தனிப்போக்(கு) இன்னா**
**அருளில்லார் தங்கண் செலவின்னா இன்னா**
**பொருளில்லார் வண்மை புரிவு.**

செய்யுளின் பொருளை உணராதவர் மத்தியில் செய்யுள்களைப் பாடுவது துன்பம். இருண்ட வழியில் தனியே செல்லுதல் துன்பம் அருளில்லாவரித்தில் யாசித்தல் துன்பம். பொருள் இல்லாதார் தானம் செய்ய விரும்புதல் துன்பம்.

உனது தந்தைக்கு அவர் முன்பு கூறிய வார்த்தைகளை நினைவுபடுத்தி நியாயம் கேட்பது பாட்டின் பொருளை அறிய விரும்பாதவர்களுக்கு அதை விளக்கி விபரமாகக் கூறுவதைப் போன்றது. பாட்டின் பொருளை அறிய விரும்பாதவருக்கு எப்படித்தான் பாட்டின் பொருளைச் சுவைபடக் கூறினாலும் அதைக் கேட்க மாட்டார். அதுபோலத்தான் உனது தந்தையும் நியாயத்தை உணரமாட்டார். அது பெரும் துன்பமானது. இருட்டில் தனி வழியே காட்டில் செய்வதைப் போன்ற துன்பத்தை தரவல்லது. சிறிது கூட மனச்சாட்சி என்ற அருள் இல்லாதவரிடம் சென்று யாசிப்பதால் எந்தவிதமான பயனும் உண்டாகாது. அது யாசிப்பவனுக்குப் பெரும் துன்பத்தைத் தான் கொடுக்கும். அதுபோலத் தான் உனது தந்தையோடு பேசுவதும் பலர் உனக்காகச் சென்று நியாயத்தைப்பேசி அவமானப்பட்டுள்ளனர். உனது தந்தையார் கல் நெஞ்சம் படைத்தவர். அவர் எந்தப் பெரிய மனிதனையும் இப்போது

மதிப்பதில்லை. கதிரேசன் பெரியவர், நடுவுநிலை உள்ளவர். அருள் உள்ளவர். அவன் சென்று கதைத்த போது , ‘‘காயத்திரியை விட்டு விட்டு வந்தால் தான் ஏற்பேன்’’ என்றாராம். பொருள் இல்லாதவன் தானம் செய்ய விரும்புவது போன்றது தான் அருள் இல்லாதவரிடம் சென்று யாசிப்பது. எமது சமூகத்தில் உள்ள எந்த ஒரு மனிதனும் உனது தந்தையுடன் சென்று கதைக்க மாட்டான்’’ என்றார் கதிர்காமநாதன்.

**11. உடம்பா(டு) இல்லாத மனைவிதோள் இன்னா**
**இடனில் சிறியாரோ(டு) யாத்தநண்(பு) இன்னா**
**இடங்கழி யாளர் தொடர்பின்னா இன்னா**
**கடனுடையார் காணப் புகல்.**

“நகுலா, துன்பத்தை அழுது போக்க முடியாது. வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் பல்வேறுவகையான துன்பங்கள் வரும். எனது மனைவி மிகவும் நல்லவள். எனது வருமானத்தை அறிந்து குடும்பம் நடத்துவார். நான்கு குடும்பத்திற்காக மாடாக உழைக்கிறேன் என்று தெரிந்து தன்னால் துன்பம் உண்டாகக் கூடாதென்பதற்காக தனக்கு இயல்பாக உண்டாகும் காமத்தையே மறைப்பவள். ஆனால் அவளின் சொந்தச் சகோதரி அதின் மாறானவள். அவளுக்கு அளவுக்கதிகமான காம உணர்ச்சி உண்டாகும். அதனால் கனவனுடன் எந்நேரமும் சண்டை பிடிப்பாள். உள்ளம் பொருந்தாத மனைவியோடு கூடி வாழ்தல் நரகத் துன்பம். பரந்தமனம் படையாத நண்பருக்கோ உறவினர்களுக்கோ உதவி செய்வது துன்பம். எனது மனைவி தனது சகோதரர்களின் பிள்ளைகளுக்குப் பார்த்து பாராமல் உதவி செய்வாள். ஆனால் அவள் அவற்றை நினையாது சண்டைபிடிப்பாள். அதனால் எனது மனைவி

துன்பப்படுவாள். அத்துடன் கடன் வாங்கியவர்களைக் கண்டால் அவர்கள் கேட்காவிட்டாலும் கேட்டுவிடுவார்களோ என்று துன்பப்படுவேன். இப்படி வாழ்க்கையில் எத்தனை யோசிதமான துன்பங்கள் வரும். அவையாவும் துன்பங்கள் என்று நினைத்துக் கலங்கினால் வாழ்க்கையை இன்பமாக வாழ முடியாது. துன்பங்களை இன்பங்களைப் பழகுதல் வேண்டும் என்றான் கதிர்காமநாதன்.

**12. தலைதண்ட மாகச் சுரம்போதல் இன்னா**
**வலைசுமந்(து) உண்பான் பெருமிதம் இன்னா**
**புலையுள்ளி வாழ்தல் உயிர்க்கின்னா இன்னா**
**முலையில்லாள் பெண்ஜ விழைவு.**

தலை அறும்படி காட்டின் கண் செல்லுதல் துன்பம். மீன்பிடித்து உண்பவன் பெருமிதம் அடைதல் துன்பம். புலால் உண்பதை விரும்புதல் துன்பம். பெண்மை நலம் இல்லாதவள் இன்பத்தை விரும்புதல் துன்பம்.

“ நகுலா, இப்பொழுது உனது தந்தையுடன் கிராமத்தில் உள்ள பல தீயவர்கள் சேர்ந்துள்ளனர். அவர்களின் சொற்படிதான் அவர் நடக்கிறார். வடிவேலனின் தங்கை அகிலா கெட்டவள். அவள் பெண்மை இல்லாதவள் என்று சொல்லி அவளது கணவன் அவளை விட்டுப்பிரிந்து சென்று பல வருடங்கள் கழிந்து விட்டன. இப்போ உனது தந்தை அகிலாவுடன் இருப்பதாக ஊரில் கதைக்கிறார்கள். பொன்மையில்லாதவள் இன்பத்தை விரும்புவது துன்பம். அதைவிடத் துன்பம் நல்லதொரு மனிதன் கெட்ட நடத்தையுள்ளவளின் வீட்டிற்குச் செல்வது இது தலை அறும்படி காட்டின்கான் செல்லுதல் போன்றது. வடிவேலன் ஓய்வு

நேரங்களில் ஊரில் உள்ள குளத்தின் மீன்பிடித்து விற்பவன். அவனும் அவனைச் சார்ந்தவர்களும் அதைப் பெருமிதமாக எண்ணுகிறார்கள். அதை நினைக்கத் துன்பமாக உள்ளது. அத்துடன் உனது தந்தையார் ஊன் உண்ணாதவர். இப்போ ஊன் உண்பதாக ஊரால் பேசிக்கொள்கிறார்கள். ஊன் உண்ணாத குடியிற் பிறந்த ஒருவன் ஊன் உண்பது பெரும் துன்பமானது. அதைக் கேட்கவே பெரும் துன்பமாக இருக்கு. அதை நினைத்து உனது தாயாரும், இனத்தவர்களும் பெருந்துன்பப் படுகின்றனர். இந்தத் துன்பங்களைப் புரியாதவராக உனது தந்தையார் இருக்கிறார். நல்லவர்கள் அவற்றை எடுத்துக்கூறினாலும் ஏற்காது விதாண்டாவாதம் பேசுகிறார். இது பெரும் துன்பமானது என்று எல்லோரும் கூறுகின்றனர்'' என்றான் கதிர்காமநாதன்.

**13. மணியிலாக் குஞ்சரம் வேந்தூர்தல் இன்னா**
**துணிவில்லார் சொல்லுந் தறுகண்மை இன்னா**
**பணியாத மன்னர்ப் பணிஇன்னா இன்னா**
**பிணியன்னார் வாழும் மனை.**

மணிகட்டாத யானையின் மீது அரசன் ஏறிச் செல்லுதல் துன்பம். பலவீனர்கள் பேசும் வீரச் சொற்கள் துன்பம். வணங்கத் தகாத மன்னரை வணங்குதல் துன்பம். துன்பத்தைச் செய்யும் மனைவியோடு கூடி வாழும் வீடு துன்பமானது.

“ நகுலா, உனது தந்தையார், தரதர சகோதரனின் சொற்படி தான் நடக்கிறார். அவரது சகோதரனது மனைவிக்கு உனது மாமியரைப் பிடிக்காது. அதனால் அவள் தரதர கணவனுக்கு இல்லாத பொல்லாவற்றைக் கூற அவர் உனது தந்தையாருக்குக் கூறி அதை நடை முறைப் படுத்துகிறார்.

உனது சித்திக்கு வடிவேலனது மனைவியுடன் நட்புண்டு. வடிவேலன் பிடிக்கும் மீன்களை மிகவும் இரகசியமாகக் கொண்டு சென்று உனது சித்தப்பாவின் வீட்டால் கொடுப்பது வடிவேலனது மனைவி. உனது சித்தாப்பாவுக்கு நான் நியாயத்தை எடுத்துக் கூறுவேன். அப்போது அவர் ஏற்றுக் கொள்வார். தரதர சகோதரனிடம் சொல்லி உங்களைச் சேர்த்து வைப்பதாகக் கூறுவார். ஆனால் அதைப் பின் மறந்து விடுவார். அதைப்பற்றிப் பேச அவருக்குப் பயம். அவர் சமாதானம் பேசுவதை அறிந்தால் உனது சித்தி வீட்டை விட்டு அவரைக்கலைத்து விடுவாள். வீரமில்லாதவன் பேசும் வீர வார்த்தைகள் என்றும் துன்பத்தையே தரும். அத்துடன் பேசத்தகாதவருடன் பேசுவதும், வணங்காதவரை வணங்குவதும் துன்பத்தையே தரும். கணவனுக்குத் துன்பங்களையும் நெருக்கடிகளையும் கொடுக்கும் மனைவி வாழும் வீடு தீராத நோயுள்ள வீடு போன்றது. அரசன் மணிகட்டிய யானையில் சென்றால் தான் மதிப்பு, கௌரவம் மணிகட்டாத யானையில் சென்றால் யாரும் மதிக்க மாட்டார்கள். அதுபோல மாட்சிமையுள்ள மனைவி கணவனைத் தெய்வமாக நினைப்பாள். அப்படி நினைத்தால் தான் அவளுக்குப் பெருமைஇ உனது சித்தப்பா மணி கட்டாத யானையிற் செல்லும். அரசனைப் போல அவள் நித்திரை யானை பின்பே தரதர வீட்டுக்கு செல்கிறார். அவள் விழிக்கு முன் வீட்டை விட்டு வெளியேறி விடுகிறார்'' என்றான் கதிர்காமநாதன்.

**14. வணரொலி ஐம்பாலார் வஞ்சித்தல் இன்னா**
**துணர்தூங்கு மாவின் படுபழம் இன்னா**
**புணர்பாவை பின்னார்பிரிவின்னா இன்னா**
**உணர்வார் உணராக் கடை.**

சுருண்டு வளர்ந்த கூந்தலை உடைய மகளின் தமது கனவர்களுக்குத் துரோகம் செய்தல் துன்பம். மாமரத்திலிருந்து வெம்பி விழுந்த கனி துன்பம். ஒழுக்கமுள்ள மகளின் பிரிவு துன்பம் அறிய வேண்டியவற்றை அறறியாதிருறுப்பது துன்பம்.

“கதிர்காமு …….. வெம்பி விழுதலானது துன்பம். ஏனென்றால் வெம்பியகனி சுவைக்காது. அத்துடன் அது எதற்கும் உதவாது. மாமரத்திற்குரியவன் முழுவதும் பழுத்தால் விற்பனை செய்யலாமென நினைத்திருப்பான். அதுபோல அறிய வேண்டியவற்றை அறியாத அறிவுடையவன்களால் அறிவுள்ளவர்களுக்கு துன்பம் ஏற்படும். அப்பா காயத்திரி பிறந்தன்றே எனக்கென்று நிட்சயித்து ஆசையைத் தூண்டிவிட்டு இப்போ அவளை வெறுத்து ஒதுக்கி விட்டு இன்னொருவளைத் திருமணம் செய் என்கிறார்.அவள் என்னுடன் பழகிய விதம் எல்லோருக்கும் தெரியும். அதனால் அவளைத் திருமணம் செய்யாரும் முன்வரமாட்டார்கள். திருமணம் செய்தாலும் பிற்காலத்தில் ஏராளமான பிரச்சினைகள் உருவாகும். இதெல்லாவற்றையும் தெரிந்தும் தெரியாதவர் போல அப்பா நடந்து கொள்வது எனக்குப் பெரும் துன்பத்தைத் தருகிறது. …….. தெரிந்த காலத்திலிருந்து அவளை நான் விரும்பி எனது மனைவியாக நினைத்து வாழ்ந்து வருகிறேன். அவள் ஒழுக்கமானவள், பண்பானவள், அறிவு நிரம்பியவள். அத்துடன் அழகானவள். மனம் பொருந்திய பெண்ணைப் பிரிவதால் எவ்வளவு துன்பங்கள் யாரும் அவளைப் பிரிந்தால் உண்டாகும் துன்பம், சுருண்டு வளர்ந்த கூந்தலை உடைய பெண் ஒருத்தி தரதர கணவனுக்குத் தெரியாது இன்னொருவருடன் கூடிக் குலவுவதைக் கணவன் கண்டால் எவ்வளவு துன்பப்படுகிறார்களோ, அவ்வளவு துன்பம் எனக்குண்டாகும்.

அதனால் தான் எதிர்ப்புக்களை மீறி அவளை அழைத்து வந்தால் வீட்டார் ஏற்பார்கள் என்றும் நினைத்தேன். அது பொய்த்து விட்டது'' என்று கலங்கினான் நகுலன் .

**15. புல்லார் புரவி மணியின்றி ஊர்வின்னா**
**கல்லார் உரைக்கும் கருமப் பொருளின்னா**
**இல்லாதார் நல்ல விருப்பின்னா ஆங்கின்னா**
**பல்லாருள் நாணப் படல்.**

கடிவாளமில்லாத குதிரையில் சவாரி செய்வது துன்பம். கல்வியறிவில்லாதர் செய்யும் செயல்கள் துன்பம். பொருளில்லாதவர்களது ஆசைகள் துன்பம். பலர் நடுவில் அவமானப் படுவது துன்பம்.

“ நேற்று மாலை வந்த எனது நண்பனான அங்கஜன் எனது தந்தையின் சொத்துக்களில் பெரும் பகுதி எனது தாயாரின் சீதனமாம். அதனால் சொத்தில் எனக்குப் பங்கிருக்காம். அதனால் வழக்குப் போடச் சொல்கிறான். அம்மா எனக்காக் கதைப்பா எனறும் கூறுகிறான். அத்துடன் காயத்திரிக்குத் தாலி கட்டுமாறும் கூறுகின்றான். இது குதிரைகளை மரையின்றி ஏறிச் செல்வதை ………….. . அத்துடன் அங்கஜன் கல்வியறிவில்லாத மூடன் . அவன் ஆராயாமல் கதைப்பான். நான் காயத்திரியை அழைத்து வந்தேனே தவிரக் குடும்பம் நடத்தவில்லை. பெற்றோரின் சம்மதத்துடன் நல்லதொரு நாளில் தாலிகட்டிய பின்பு தான் அவளை மனைவியாக ஏற்றுக் குடும்பம் நடத்துவேன் என்று சொல்ல, அவன் பெற்றோர் அவளைப் பலவந்தமாகப் பிரிந்துவிடுவார்கள் என்கிறான். இது கல்வியறிவில்லாதவனின் பேச்சானாலும் துன்பம் தருகிறது. இப்பொழுது என்னிடம் பொருள்

இல்லை. பத்துப்பவுனில் தாலிக்கொடி கட்ட வேண்டும். அவளுக்குத் தேவையான ஆபரணங்கள் அனைத்தையும் வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று ஆசைப் படுகிறேன். பொருள் இல்லாமையால் எனது ஆசைகளும் துன்பத்தைத் தருகின்றன. அப்பாகற்றவர். ஆனால் இப்போது கல்வியறிவில்லாதவர்களுடன் சேர்ந்து கதைக்கிறார். நேற்றுச் சந்தியில் கண்டு விட்டு'', நீ எனக்குப் பிறந்திருந்தால் எனது சொல்லைக் கேட்டிருப்பாய்'' என்று பலமாகச் சொன்னார். சந்தியில் கூடியிருந்தோரில் பலர் பெரிதாகச் சிரித்தனர். சிலர் கேளாதது போலச் சென்று விட்டனர். பலரின் மத்தியில் அவர் அப்படிப் பேசியது எனக்குப் பெரும் அவமானமாக இருந்தது. போட்டி அவிழ்ந்து விழுந்து விட்டது போன்ற நிலை'' விம்மி விம்மி அழுதான் நகுலன்.

**16. உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பின்னா**
**நண்ணாப் பகைவர் புணர்ச்சி நனியின்னா**
**கண்ணில் ஒருவன் வனப்பின்னா ஆங்கின்னா**
**எண்ணிலான் செய்யுங் கணக்கு.**

உண்ணாமல் சேர்த்து வைக்கும் பெருஞ்செல்வம் துன்பமானது. பொருந்தாத பகை வந்து சேர்க்கை மிகவும் துன்பம் தரும். பார்வையற்றவனது அழகு துன்பமானது. அவ்வாறு படிக்காதவன் செய்யும் செயல்கள் துன்பமானது.

'' அம்மாவிற்கு நான்கு பெண் சகோதரிகள் உள்ளனர். அதனால் அம்மாவின் தந்தையார் அவர்களுக்குப் போதிய உணவும் நல்ல உடைகளும் வாங்கிக் கொடுப்பதில்லை. அப்படிச் சேமித்துத் தான் பெண்பிள்ளைகளைக் கரை சேர்ந்ததாக அம்மா கூறி எமக்கு நல்ல உணவு வகைகளைச் சமைத்து தருவா,''

பெண்பிள்ளைகள் பெற்றோருடன் வாழும் போது தான் தாம் நினைத்தவற்றை உண்ண முடியும், உடுக்க முடியும், கணவன் மாறுபாடுடையவனானால் திருமண வாழ்வு சுவைக்காது. மகிழ்வுடன் இராது அதனால் என்னுடன் இருக்கும்போது நன்றாக அனுபவியுங்கள்'' என்பர். அப்படி உண்ணாமல் சேர்த்து வைத்த அந்தப் பழிச்சொத்து எனக்குத்தேவையா? என்றும் யோசிப்பேன். தனக்கு நிகரானவர்களையே நண்பர்களாகக் கொள்ளுதல் வேண்டும். அதுபோலவே பொருத்தமானவர்களையே பகைத்தல் வேண்டும். காயத்திரியின் தந்தையார் மிகவும் நல்லவர். ஒழுக்கமானவர். தனது சகோதரியின் கணவரைப் பகைக்கக் கூடாதென்பதற்காகத் தான் எம்மைச் சேர்க்காது வைத்திருக்கிறார். பொருந்தாத பகைவரது சேர்க்கை மிகவும் துன்பமானது. என்று சொன்னாராம். பார்வையற்றவன் மன்மதனாக இருந்தாலும் பெண்கள் விரும்பமாட்டார்கள். அது போலக் கல்வியறிவில்லாதவர்கள் கூறும் சொற்களும் , செய்யும் செயல்களும் துன்பத்தையே தரும் என்பதை அப்பா புரிந்து கொள்ளாது. குருடர்களைப் போலிருக்கும் மனிதர்களுடன் உறவு வைக்கிறார்'' என்று கலங்கினான் நகுலன்.

**17. ஆன்றவிந்த சான்றோருள் பேதை புகலின்னா**
**மான்(று) இருண்ட போழ்தின் வழங்கல் பெரிதின்னா**
**நோன்(று) அவிழ்ந்து வாழாதார் நோன்பின்னா ஆங்கின்னா**
**ஈன்றாளை ஓம்பா விடல்.**

கல்வியாளரின் சபைக்கு அறிவில்லாதவன் செல்லுதல் துன்பமானது. இருண்ட வேளையில் வழியே செல்லல் துன்பம். துன்பங்களைப் பொறுத்து அடக்கத்துடன் வாழாதிருப்பது துன்பம். அதுபோலப் பெற்ற தாயைக் காப்பாற்றாமல் விடுவது துன்பம்.

“ நேற்று மாலை சிவன் கோயிலின் பிரசங்கம் நடைபெற்றது. அயலூரில் உள்ள ஒரு அறிஞர் உரையாற்றிக் கொண்டிருந்தார். அவர் வேத உபநிடதங்களைக் கற்றவர். அதனால் ஊர்ப்பெரியவர்களும் அவரது பேச்சை ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்தனர். அப்பொழுது உனது தந்தையாரும் வேறு சிலரும் சபைக்குச் சென்றமர்ந்தனர். உனது தந்தையாரைத் தவிர மற்றவர்கள் நன்றாகக் குடித்திருந்தனர். உனது தந்தையார் பிரசங்கியை ஏதோ கேட்க அவருடன் கூடச் சென்றவர்கள். பிரசங்கியைப் பரிகசிந்தனர். அதனால் பெரும் அல்லோல கல்லோலமேற்பட்டது. உனது தந்தையைத் தான் எல்லோரும் குறை கூறினார். கற்றவர் இருக்கும் சபைக்குக் கல்லாதவர் என்றால் அடங்கியிருத்தல் வேண்டும். இல்லாவிட்டால் துன்பப்பட நேரிடும். பிரசங்கி மனவருத்தத்துடன் சென்ற பின்பு கூடியிருந்தவர்கள் உனது தந்தையாரை எச்சரித்தனர். உனது தந்தையார் இப்போது இருண்ட வழியில் துட்டர்களுடன் வெளிச்சமில்லாது செல்கிறார். இது ஆபத்தானது என்று உணர்கிறாறில்லை. தீயவர்கள் அவரின் மனக்குழப்பத்தைத் தமக்குச்சாதகமாகப் பயன்படுத்துகின்றனர். வாழ்க்கையில் பல்வேறு வகையான துன்பங்கள் வரும். அதைத் தாங்கி நல்லமுறையில் வாழுதல் வேண்டும். அதைத்தாங்க முடியாது. தீமைகள் செய்து கொண்டு கோயில்களில் பூசை செய்வதும் பிரார்த்தனைகளில் ஈடுபடுவதும் நோன்பு நோற்பதும் துன்பத்தையே தரும் என்று புரியாத உனது தந்தை யார் நேற்றுச் சிவன் கோயிலில் நோன்பிருந்து பொங்கினார். அப்பொழுது கோயிலுக்கு வந்த அவரது தாயார், ‘‘மகனே, பெற்ற தாயின் சொல்லைக் கேள். நகுலன் எந்தப்பிழையும் செய்யவில்லை. நீ தான் அவள் பிறந்தன்றே அவனுக்கு நிட்சயித்தனீ. அதனால் அவர்களுக்குத்

துன்பஞ்செய்யாதிரு'' என்று சொல்லும் போது உனது தந்தையார் தரதர தாயாரைத் தாக்கினாராம். பெற்ற தாயின் சொல்லைக்கேளாவிட்டால் துன்பம். பெற்ற தாயை அவமதித்தல் துன்பம். பெற்ற தாயைக் காப்பாற்றாமல் விடுதல் துன்பம் என்று ஏன் உனது தந்தைக்குப் புரியாமல் இருக்கிறா'' என்று கவலைப்பட்டான் கதிர்காமநாதன்.

**18. உரனுடையான் உள்ளம் மடிந்திருத்தல் இன்னா
மறனுடை ஆளுடையான் மார்(பு)ஆர்த்தல் இன்னா
சுரம்அரிய கானம் செலவின்னா இன்னா
மனம்வறி யாளர் தொடர்பு.**

மேலான அறிவுடையவன் மனம் சோம்பியிருத்தல் துன்பம். வீரர்கள் பலரை உடையவன் தனித்துப் போரிடுதல் துன்பம். ஆள் நடமாட்டமில்லாத காட்டு வழியால் செல்லுதல் துன்பம். பொது நலமில்லாதவர்களுடன் சேர்வது துன்பம்.

''கதிர்காமு, நல்ல குணங்கள் இல்லாதவர்களுடன் சேர்ந்திருப்பது என்னும் துன்பங்களையே தரும் என்பதை உணராததால் தான் எனது தந்தையார் தீயவர்களுடன் சேர்ந்து தீய செயல்களைச் செய்கிறார். அதனால் எவ்வளவோ துன்பங்கள் வந்தபோதும் அதை உணர்ந்து திருந்துகிறாரில்லை. துன்பங்கள், சோதனைகள், வேதனைகள், வருவது மனிதர்களைத் திருத்துவதற்கென்று பெரியவர்கள் சொல்லியுள்ளனர். ஆனால் தீயவர்கள் தீமைகளையே செய்கின்றனர். மேலான அறிவுடையவர் தம்மாலான புத்திமதிகளைக் கூறியும் கேட்காததால் அவர்கள் மனம் சோர்ந்திருக்கின்றனர். இதுவும் துன்பமானது. நாளைக்கு ஒரு பெரும் பிரச்சினை வந்தால் யாரும் உதவமுடியாத நிலை

ஏற்படும். அதை நினைக்கத்தான் கவலையாகவிருக்கு. அப்பாவின் உறவினர்கள், நல்ல நண்பர்கள் எல்லோரும் இப்போ அவரது தீய செயல்களைக் கண்டு அவரை விலக்கிவைத்திருக்கின்றனர். இது பல போர்வீரர்களை உடைய அரசன் தனித்துப்போர் செய்வதை ஒக்கும். தனித்துப் போரிடுபவன் எதிரிகளால் சுலபமாகத் தண்டிக்கப்படுவது போல அப்பிரபும் விரைவில் தண்டிக்கப்படுவார். இப்போது அவர் அடர்ந்த காட்டு வழியே இரவு வேளைகளில் தனித்துச்செல். பலனைப்போல் தன்மைப்படுத்தப்பட்டுள்ளார். அம்மாவுடன் கூட அவர் நல்லுறவைப் பேணுவதில்லை. அம்மா இரகசியமாக எனக்கு உதவி செய்கிறான் என்றே நினைக்கிறார். அம்மா என்மீது உயிரையே வைத்திருக்கிறா. ஆனால் எனக்கு உதவி செய்வது எப்படி?அப்பாவின் கையாட்கள் எப்போதும் வீட்டில் இருப்பார்கள். மாமாவும் உறவினர்கள் பலரும் அங்கு செல்வதில்லை. அப்படியிருக்க அம்மா எப்படி உதவி செய்வதாக நினைத்து அவாவைத் தண்டிக்கிறார். ஆந்திரக் காரனுக்குப் புத்திமட்டு என்று சொல்வார்கள். அது தான் நடக்கிறது'' என்றான் நகுலன்.

**19. குலத்துப் பிறந்தவன் கல்லாமை யின்னா**
**நிலத்திட்ட நல்வித்து நாறாமை யின்னா**
**நலத்தகையார் நாணாமை யின்னா ஆங்கு இன்னா**
**கலத்தல் குலம்இல் வழி.**

நற்குடியிற் பிறந்தவன் கற்காமல் இருப்பது துன்பம். பூமியில் விதைத்த நல்ல விதைகள் முளையாமல் போதல் துன்பம், அழகிய மகளின் நாணமின்றியிருத்தல் துன்பம். அதுபோல ஒவ்வாத குலத்தில் மணம் முடித்தல் துன்பம்.

“அப்பா இப்பொழுது வீட்டைச் சரியான முறையில் கவனிப்பதில்லை. எனது தம்பி தரம் எட்டில் படிக்கிறான். அவன் இப்போது பாடசாலைக்கு வருவதில்லை என்று அவனைக் கற்பிக்கும் ஆசிரியர் நேற்றுத் தற்செயலாகச் சந்தையில் சந்தித்தபோது சொன்னார், “நகுலா, நற்குடியிற் பிறந்தவர்கள் கற்காமல் இருப்பது பெருந்துன்பம். நன்றாகக் கற்றால் தான் வாழலாம். அதைவிடக் கீழான குடியிற் பிறந்தவர்களின் கீழும் வேலை செய்யாமல் இருக்கலாம். உனது வீட்டில் சேகவம் செய்த சின்னையாவின் மகனின் கீழ்த்தான் உனது சித்தப்பாவின் மகன் வேலை செய்கிறான். இது கௌரவக்குறைவு. நன்றாகப் படித்தால் இந்த நிலைவராது. உனது மாமாபடிக்கவில்லை. அதனால் பெரும் விவசாயியான அவரின் விளைபொருட்களை வியாபாரிகள் ஏமாற்றி வாங்குகின்றனர். . அந்த நிலை உனது தம்பிக்கும் வரும். எடுத்துச்சொல்” என்று சொன்னார், “ இது பூமியில் விதைத்த நல்ல விதைகள் முளைக்காதிருத்தலை ஒத்தது.” என்றும் சொன்னார். நான் என்ன செய்வது? அத்துடன் எனது தங்கை மிகவும் அழகானவள். பல உயர்ந்த குடியினர் அவளைப் பெண்கேட்டு வருகின்றனர். ஆனால் அவள் நாணமின்றிச் சின்னையாவின் மகனோடு சிரித்துக் கதைப்பதாக மாமா சொன்னார். அதற்குச் சித்தப்பா உடந்தை என்றும் சொன்னார். எம்மீதுள்ள விரோதம் காரணமாகச் சித்தப்பா அப்படி நடக்கிறார். ஆனால் அது அவரது குடிக்கும் கேவலம் என்பதை உணர்கிறாரில்லை. அழகிய மகளின் நாணமின்றி ஆண்களுடன் பழகுவது எவ்வளவு துன்பமானது? தற்செயலாக அவள் அவனுடன் சென்றாலேயானால் எமக்கு எவ்வளவு துன்பம் தெரியுமா? ஒவ்வாத குடியில் திருமணம் செய்யக்கூடாது. நாம் மாமிசம் உண்பதில்லை. ஆனால் அவர்கள் மாட்டை வெட்டி உண்பவர்கள். இவள் மாட்டு இறைச்சியை எப்படிச்

சமைத்துக்கொடுக்கப்போகிறாள்? இப்படியான ஒவ்வாத பல செயல்களைச் செய்ய வேண்டிவரும் என்பதற்காகத் தான் பெரியவர்கள் அப்படிச் சொல்லியுள்ளனர். நான் அவளைக் கண்டு பேசுவதை யாராவது கண்டு அப்பாவுக்குச் சொன்னால் பெரும் பிரச்சினைகள் வந்து விடுமெனப் பயப்படுகிறேன்". என்று கலங்கினான் நகுலன்.

**20. மாரிநாள் கூவும் குயிலின் குரல்இன்னா**
**வீரம் இலாளர் கடுமொழிக் கூற்(று) இன்னா**
**மாரி வளம்பொய்ப்பின் ஊர்க்கின்னா ஆங்கின்னா**
**மூரி எருத்தால் உழவு.**

மழைக்காலத்தில் கூவுகின்ற குயலின் ஓசை துன்பம். வீரமில்லாதவர்களது கடுஞ்சொல் துன்பம். மழை பெய்யாதிருக்குமானால் உலகத்தவர்களுக்குத் துன்பம். அதுபோலக் கட்டுக்கடங்காத காளையால் உழுதல் துன்பம்.

அழகிய மகளின் நாணமின்றி வாழ்வது துன்பம். அதுபோல மழை காலத்தில் கூவுகின்ற குயிலின் இனிமையான ஓசை துன்பமானது. எதுவும் தேவையான போது பசி கிடைத்தால் தான் இன்பம். தேவையில்லாத போது கிடைக்கும் உணவும் துன்பத்தைத் தரவல்லது. வீரமில்லாதவர்கள் அடங்கியிருப்பது தான் சிறப்பானது. அதைவிட்டுவிட்டு வீரமில்லாதவன் யாரோடாவது வீரமாகக் கதைத்தால் அதனால் அவன் துன்பப்படுவான். காயத்திரியின் அப்பா பயந்தவர். பிரச்சினைகளுக்குப் போகாதவர். ஒழுக்கமாக வாழ்பவர். அவர் அப்பாவுடன் சேர்ந்து திரியும் தியாகராசாவாலும் வடிவேலனாலும் தான் பிரச்சினைகள் வருகின்றன என்று யாருக்கோ

கூறியிருக்கிறார். அது உண்மைதானே. அப்ப நல்லவர். ஒழுக்கமுள்ளவர். மாமாவினது சகோதரன் அப்பாவின் தோட்டக் காணிக்கு அருகில் உள்ள தோட்டக் காணியை அப்பாவிலும் பார்க்க விலை கூடக்கேட்ட மயில் வாகனத்திற்கு விற்றுவிட்டார். அதற்கு மாமா என்ன செய்வார்? அது தானே பிரச்சினை அதை தியாகராஜவும் வடிவேலனும் பெருப்பிக்கிறார்கள் என்று கூறியது பிழையா? அதனால் கோபப்பட்ட தியாகராசா நேற்று இரவு மாமாவுக்கு ஆள்வைத்து அடிப்பித்து விட்டான். அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மாமி மாமாவை அவர்களுடன் சண்டைக்குப் போகவேண்டாம் என்று சொன்னவராம். வீரமில்லாதவர்கள் கடுஞ்சொற் பேசுவதும் துன்பம். வீரர்களுடன் பிரச்சினைப் படுவதும் துன்பம் என்று இப்போ மாமா கூறுகிறராம். அதைவிட மழை இம்முறை குறைவாகவே பெய்துள்ளது. அதனால் விவசாயிகள் வயலை உழுது விதைக்கமுடியாது. கஷ்டப் படுகின்றனர். காயத்திரியின் சகோதரியின் சகோதரனிடம் ஒரு முரட்டுக் காளை உள்ளது. அதை விற்கும்படி மாமா அடிக்கடி சொல்வார். ஆனால் அவன் கேட்பதில்லை. நேற்று அவன் வயலை உழும்போது அந்த முரட்டுக்காளை அவனைப் பலமாகத் தாக்கி விட்டது. இப்போ அவனும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். அதனால் மாமி எங்களை வந்து தமது வீட்டில் இருக்குமாறு கூறுகிறார். என்னால் முடிவு எடுக்க முடியவில்லை'' என்றான் நகுலன்.

**21. ஈத்த வகையால் உலவாதார்க்(கு) ஈப்(பு) இன்னா**
**பாத்துணல் இல்லார் உழைச்சென்(று) உணல்இன்னா**
**மூத்த இடத்துப் பிணியின்னா ஆங்கின்னா**
**ஒத்திலாப் பார்ப்பான் உரை.**

கொடுப்பதை மகிழ்வுடனும் திருப்தியுடனும் பெற்றுக்கொள்ளாதவருக்குக் கொடுத்தல் துன்பம். பகுத்துண்ணாதவரிடம் சென்று உண்ணுதல் துன்பம். முதுமைக் காலத்தின் நோய் துன்பம். அவ்வாறே வேதமோ தாத பிராமணனது சொற்கள் துன்பம்.

“மாமாமுதியவர் மாமியும் முதியவர் அதனால் மாமியால் மாமாவைப் பராமரிக்கப்முடியவில்லை.முதுமைக் காலத்தின் நோய்கள் உண்டாவது பெருந்துன்பம். மைத்துனனும் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில்சாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதால் தோட்ட வேலைகளையும் வீட்டு வேலைகளையும் செய்ய முடியாது. சிரமப்படுகிறார்கள். பயிர்கள் நீர்ப்பாய்ச்சாததால் வாடிக்கிடக்கின்றன. கூலிவேலை செய்பவர்களுக்கு இதுவரை உணவு தயாரித்துக் கொடுத்தது காயத்திரி. இப்போ அவள் என்னுடன் வந்து விட்டதால் மாமி பெருந்துன்பப்படுகிறா. நேற்றுச் சமைக்கவில்லை. பக்கத்தில் மாமியின் சகோதரி இருக்கிறாள். அவன் தமது குடும்பத்தினருக்கே ஒழுங்காககச் சமைத்துக் கொடுப்பதில்லை. அத்துடன் இனசனங்களுடன் ஒற்றுமையாகவும் வாழ்வதில்லை. அதனால் மாமி அங்கு சென்று சாப்பிடமாட்டார். பகுத்துண்ணாதவர்களின் வீட்டிற்குச் சென்று உண்பது துன்பமானது என்று அவர் அடிக்கடி சொல்வர். அத்துடன் அவர்களது வீட்டு உணவு மாமா சாப்பிடமாட்டார்.அத்துடன் அவர்கள் கொடுக்கக் கொடுக்கக் வாங்குவார்களே தவிரத் திருப்திப்பட மாட்டார்கள். மாமி மாமாவுக்குத் தெரியாமல் எவ்வளவோ பொருட்கள் கொடுத்துள்ளபோதும் அவர்கள் மாமியின் குடும்பத்தைக் குறை சொல்லியப இருப்பார்கள். அதைவிட வேதம் ஓதாத ஒரு பிராமனன் இருக்கிறான். அவன்

குடித்துவிட்டுச் சாப்பிட்டதற்காக மாமாவின் வீட்டுக்கு வருவான். இப்போ சாப்பாட்டு நேரம் வந்திருக்கிறான் ஒரே கரைச்சலாக இருக்கு. சாப்பாடு இல்லாவிட்டால் பணம் தருமாறு கேட்டானாம். இவற்றிற்காகத் தான் மாமி தங்களோடு வந்திருக்குமாறு கேட்கிறார்'' என்றான் நகுலன்.

**22. யானையில் மன்னரைக் காண்டல் நனிஇன்னா**
**ஊனைத்தின்(று) ஊனைப் பெருக்குதல் முன்இன்னா**
**தேன்நெய் புளிப்பின் சுவைஇன்னா ஆங்கின்னா**
**கான்யா(று) இடையிட்ட ஊர்.**

யானைப் படையில்லாத அரசனைப் பார்த்தால் துன்பம். ஓர் உயிரைக் கொன்று அதன் ஊனை உண்டு தன் ஊனை வளர்த்தல் துன்பம். தேனும் நெய்யும் பழுதடைந்தால் அதை உண்ணல் துன்பம். அவ்வாறே காட்டாறின் இடையே உள்ள ஊருக்குத் துன்பம்.

''யானைப் படையில்லாத அரசனைப் பார்த்தல் துன்பம் என்று பெரியவர்கள் சொல்வார்கள். யானைப்படை தான் அரசனின் மேன்மையைப் பறைசாற்றிப் புகழை வளர்ப்பது. அப்படையில்லாத அரசன் பல்லுப்பிடுங்கிய பாம்பைப்போல செயலிழந்திருப்பான் என்றும் பெரியவர்கள் சொல்வார்கள். அது போலத்தான் மாமா செயலிழந்து வைத்தியசாலையில் படுத்திருக்கிறார். அவரைப்பார்க்க பரிதாபமாக இருக்கிறது. காட்டாற்றுக்கு இடையில் உள்ள ஊரில் வாழும் மக்கள் மழை காலங்களில் உயிரைக் கையில் பிடித்தபடி வாழ்வார். ஆறுபெருகியோடும் காலங்களில் நோயாளர்களும் கர்ப்பினிப்பெண்களும் பெருந்துன்பம் அடைவர். இப்போ மாமாவின் குடும்பமும் காட்டாற்றின் பிடியில்

சிக்கிய குடும்பம் போலவே தத்தளிக்கிறது. ஆறுதல் சொல்லவும் யாரும் இல்லை. உதவி செய்யவும் யாரும் இல்லை. நேற்று மாமி சந்தியில் இருக்கும் சாப்பாட்டுக்கடையில் தான் மதிய உணவு வாங்கிச் சென்று கொடுத்துள்ளார். புளித்த நெய்விட்டு உணவைத் தயாரித்துள்ளனர். அதை உண்ட மாமாவுக்கு வயிற்றோட்டமும் வந்தியும் ஏற்பட்டது. அதனால் அவர் பெருந்துன்பப்பட்டார். மாமாவின் நண்பர் ஒருவர் மாமா வைத்தியசாலையில் இருப்பதைப் பட்டனத்திற்கு வந்த போது கேள்விப்பட்டிருக்கிறார். அவர் பட்டனத்தில் உள்ள சாப்பாட்டுக் கடையில் மதிய உணவாகச் சோறுவாங்கியிருக்கிறார். அதற்குள் கோழிக்காலும் முட்டையும் இருந்ததாம். ஓர் உயிரைக் கொன்று அதன் உடலை உண்டு தன்னுடலை வளர்க்கக் கூடாதென்பதற்காகவே எமது குடும்பம் ஊன் உண்பதில்லை. நன்பர் தெரியாமல் வாங்கி வந்து விட்டார். அதைப் பார்த்த நேரம் முதல் மாமா கவலைப்பட்ட படி இருக்கிறார். இதெல்லாம் என்னால் தானே வந்தது'' என்று கவலைப்பட்டான் நகுலன்.

**23. சிறையில்லா மூதூரின் வாயில்காப்(பு) இன்னா**
**துறையிருந்(து) ஆடை கழுவுதல் இன்னா**
**அறைபறை அன்னவர் சொல்இன்னா இன்னா**
**நிறையில்லான் கொண்ட தவம்.**

மதில் இல்லாத பழைய ஊரின் வாயிலைக் காத்தல் துன்பம். நீர்த்துறையில் ஆடை தோய்த்தல் துன்பம். பறைபோன்றவர்களது சொற்கள் துன்பம். பொறிகளைக் கட்டுப்படுத்தாதவனின் தவம் துன்பம்.

''இப்போ மாமாவின் குடும்பம் மதில் இல்லாத பழைய ஊரின்வாயிலைக் காப்பதைப் போன்ற துன்பமாக உள்ளது. மதில்

இல்லாத பழைய ஊரைப் பாதுகாப்பதென்பது சிரமமான காரியம். அதுபோலத் தான் மாமாவின் குடும்பமும் வந்து விட்டது. காயத்திரியின் சகோதரிகள் இருவரும் தாயின் சொல் கேட்கிறார்களில்லை. இளையமகன் கயானனன் வடிவேலனோடு சேர்ந்து குடிக்கிறானாம். படிக்கிற வயதில் பாடசாலைக்குச் செல்லாது வடிவேலுடன் சேர்ந்து கள் ளைக் குடித்திருக்கிறான். அது உடுத்த உடுப்போடு வயிற்றைக் கலக்கியிருக்கிறது. அப்படியே சென்று ஊரவர்கள் குறிக்கும் குளத்தில் குளித்துத்தான் உடுத்தியிருந்த ஆடையையும் தோய்த்திருக்கிறான். குளிக்கும்குளத்தில் ஆடை தோய்ப்பதே குற்றம் இவன் மலமுள்ள ஆடையைத் தோய்த்திருக்கிறான். ஊரவர் திரண்டு சென்று தாக்கிவிட்டனர். அதனால் அவனும் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். அதைவிட மாமாவின் தம்பியாருக்குக் கதைக்கப்பேசத் தெரியாது. கயானனுக்கு அடித்தவர்களிடஞ் சென்று கதைக்கக் கூடாதவற்றையெல்லாம் கதைத்திருக்கிறார். அவர்கள் அவரையும் தாக்கிவிட்டனர். இதனால் அக்குடும்பம் பெரும் பிரச்சினைப்படுகிறது. ஆலோசனைகள் கூறவோ உதவி செய்யவோர் யாரும் இல்லை. அதனால் மாமி வந்து ஒரே கரைச்சல். மாமி வீட்டுக்கு வந்தது கயானனுக்குத் தெரிந்து விட்டது. அவன் எம்மைச் சேர்க்கக் கூடாதென்று தாயுடன் சண்டைக்குப் போகிறான். அதைவிடச் வெளியூர்ச் சாமியார் ஒருவர் கோயிலில் வந்திருந்து நினைத்த காரியம் சொல்கிறார். நேற்று மாலை யாரோ ஒரு பெண்ணுடன் தகாத முறையில் நடந்து கொண்டாராம். அவரைப் பிடித்துக் காவல் துறையில் கொடுத்திருக்கிறார்கள். பொறிகளைக் கட்டுப்படுத்த முடியாத சிலர் சாமியார் வேடம் போட்டுத் தம் இச்சைகளைத் தீர்த்துக்

கொள்ள முயல்கிறார்கள். இதுவும் பெரும் துன்பம்'' என்றான் நகுலன்.

**24. ஏமம்இல் மூதூர் இருத்தல் மிகஇன்னா**
**தீமை யுடையார் அயலிருத்தல் நன்(கு)இன்னா**
**காமம் முதிரின் உயிர்க்(கு)இன்னா ஆங்கின்னா**
**யாம்என் பவரோடு நட்பு.**

காவல் இல்லாத பழைய ஊரில் வாழ்தல் துன்பம். தீயோரின் பக்கத்தில் இருத்தல் துன்பம். காமநோய் முற்றினால் உயிருக்குத் துன்பம் அத்துடன் தான் என்ற செருக்குடையவரோடு நட்புப் பூணல் துன்பம்.

''இப்போ எமது ஊர்க்காவல் இல்லாத பழைய ஊராகிவிட்டது. தீயவர்களின் ஆதிக்கம் மேலோங்கியதால் நல்லவர்கள் ஒதுங்கிக் கொண்டனர். அதனால் தீயவர்கள் தன்னிச்சையாகச் செயற்படுகின்றனர். கண்டிக்க யாரும் இல்லாததால் தீயவர்கள் தம் மனம் போனபடி வாழ நினைக்கிறார்கள் . இது பெருந்துன்பமாஹக இருக்கிறது. தீயவர்களுடன் பேசுவது துன்பம். தீயவர்களோடு வாழ்தல் துன்பம் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்போ தீயவர்களைக் காண்பதே துன்பமாக இருக்கிறது. நான் நாகராசாவின் தோட்டத்திற்கு அருகில் இருந்த எனது தோட்டத்தை அவனது கரைச்சல் தாங்கமுடியாது விற்றேன். இப்போ வாங்கியவனுக்கும் நாகராசா தொல்லை கொடுக்கிறானராம். தீயவர்களுக்கு அருகே இருக்கக் கூடாது என்று அதை வாங்கியவன் விற்க நினைக்கிறார். ஆனால் அதை யாரும் வாங்குகிறார்கள் இல்லை. தீயவர்களுக்கு அருகில்

இருப்பது பெருந்துன்பம் என்று பலரும் நினைக்கிறார்கள். எனது தோட்டத்தை வாங்கியவனின் மனைவி நேற்று நண்பகல் தரதர கணவனுக்கு மதிய உணவு கொண்டு சென்றிருக்கிறார். தரதர தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த நாகராசா அவளைக் கண்டு விட்டுக்காமம் தலைக்கேறி அவளுடன் தகாத முறையில் நடந்துள்ளான். அவள் பெருங்குரலெடுத்து அலற வீதியாற் சென்றவர் ஓடிவந்து நாகராசாவுக்குச் சரியான அடி. இப்ப முற்றுயிராகச் கிடக்கிறான். அவன் இயல்பாகவே காமம் மிகுந்தவன். இந்த முறை தான் கையும் மெய்யுமாக சுகப்பட்டு வாங்கிக் கட்டியிருக்கிறான். அவனுக்கு அடங்கச் சுமை சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தது. அதனால் சரியான அடியாம். அத்துடன் நாகராசா தான் என்ற அகம் பாவம் மிக்கவன். அதனால் அவன் யாரையும் மதிப்பதில்லை. சனம் சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தது. அடித்தவர்கள் அப்பயே விட்டு விட்டுச் சென்று விட்டார்கள். இரவாகியும் அவன் வீட்டுக்கு வராமையால் வீட்டார் அவனைத் தேடிக்கண்டு பிடித்து வைத்தியசாலையில் அனுமதித்திருக்கிறார்கள்''. என்றான் கதிர்காமநாதன்.

**25. நட்டார் இடுக்கண்கள் காண்டல் நனிஇன்னா**
**ஒட்டார் பெருமிதம் காண்டல் பெரி(து)இன்னா**
**கட்டில்லா மூதூர் உரையின்னா ஆங்கின்னர்**
**நட்ட கவற்றினால் சூது.**

நன்பர்கள் துன்பப்படுதலை பார்த்தல் துன்பம், பகைவரது செருக்கைப் பார்த்தல் துன்பம். சுற்றத்தார் இல்லாத ஊரில் வாழ்தல் துன்பம். அது போல சூதாடுதல் துன்பம். நகுலா நீ படும் துன்பங்களைப் பார்க்க எனக்கு வேதனையாக உள்ளது.

நாமிருவரும் நன்பர்கள். நான் வேற்றுரவனானாலும். பட்டணத்தில் உள்ள பாடசாலையொன்றில் கட்க ஆரம்பித்த நாட்களில் இருந்து நெருங்கிய நண்பர்களாகப் பழகி வருகின்றோம். உனது துயரில் நானும் எனது துயரில் நீயும் பங்கு கொண்டு மகிழ்ந்திருக்கிறோம். அதனால் தான் நீ காயத்திணியை அழைத்து வந்த போது சிறிதானதாயினும் ஒரு வீடு பெற்று தந்தேன். ஆனால் அதிலும் உன்னால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. சுற்றத்தார்கள் இல்லாத ஊரில் வாழ்தல் மிகவும் சிரமம். இங்கு ஆபத்திற்குக் கூட உதவ என்னைத் தவிர யாரும் இல்லை. நான் வேலைக்குச் சென்று விட்டால் உனக்கு உதவ யாரும் இல்லை. காயத்திரி தனியே வீட்டில் இருக்க பயப்படுகிறாள் என்கிறாய். ஊரில் அவளை யாருக்கும் தெரியாது. அத்துடன் யாரையும் அவளுக்கு தெரியாது. இது பெரும் துன்பம். நான் என்ன செய்வது. வீடு மிகச் சிறியது. எமக்கே இடம் போதாது. நானும் மனைவியும் பிள்ளைகளும் பெற்றோரும் மிகவும் சிரமப்பட்டே வாழ்கிறோம். உயிர் நண்பனான நீ பெரும் துன்பப் படும் போது உதவ முடியாதவனாக இருப்பதை என்னி நான் மிகவும் துன்பப் படுகிறேன். என்னால் எதுவும் செய்ய முடியவில்லை. என்று கலங்கினான் கதிர்காம நாதன். அதைக் கண்டு பதரிப் போனான் நகுலன். ஐயையோ, நீ செய்த இந்த உதவியை நான் உயிர் உள்ளவரை மறக்க மாட்டேன். நீ எனக்கு இந்த வீட்டை எடுத்துத் தந்து உரிய பொருட்களும் தந்து உதவினாய். ஆனால் எனக்கு ஒரு மனவருத்தம் என்று கூறி நிறுத்திய நகுலன் சிறிது நேரம் பொருத்துச் சொன்னான். நீ சூதாடுவதாக கேள்விப்பட்டேன். சூது குடியைக் கெடுத்து விடும். நீ மாத சம்பளத்துடன் வேலை செய்கிராய். ஓய்வு நேரங்களில் கூட வேலை செயடகிறாய். அப்படி இருந்தும் கஷ்ட்டப் படுகிறாய் உனது பிள்ளைகளின் பாடசாலைக் கட்டணங்களைக் கூடக் ஒழுங்காகக் கட்டுவதில்லை

என்று கேள்விப்பட்டேன். இந்த நிலை உனக்குச் சூதாடுவதால் தான் வந்தது. நீ சூதாட்டத்தை கைவிடாவிட்டால் உனது குடும்பம் அழிந்து விடும். பிள்ளைகள் ஒழுக்கம் தவரிறிவிடுவார்கள். நண்பா நண்பன் ஒருவன் துன்பப் பட்டால் அந்தத் துன்பம் உண்மையான நன்பர்களுக்கும் உண்டு அதனபல் தயவு செய்து சூதாடுவதை விடு என்று அழுதான் நகுலன்.

**26. பெரியாரோ(டு) யாத்த தொடர்விடுதல் இன்னா**
**அரியவை செய்தும் எனவுரைத்தல் இன்னா**
**பரியார்க்குத் தாம்உற்ற கூற்றின்னா இன்னா**
**பெரியோர்க்குத் தீய செயல்.**

பெரியோருடன் கொண்ட தொடர்பை விடுவது துன்பம். செய்யமுடியாத செயல்களைச் செய்வோம் என்று வாக்களிப்பது துன்பம். தன்னிடத்தில் அன்பில்லாதவரிடம் தம் துன்பத்தைக் கூறுதல் துன்பம். பெரியவர்களுக்குசத் தீயவற்றைச் செய்தல் துன்பம்.

“ கதிர்காமு, நீ அதிபர் தணிகாசலத்துடன் நெருங்கிய தொடர்பு வைத்திருத்தாய். அவர் பெரியவர். ஊரில் உள்ள அனைவரும் அவரைத் தெய்வமாக மதிப்பர். நீ அவரிடஞ் சென்று பணம் வாங்குவாய். உனது பிள்ளைகள் மாலை நேரங்களிற் சென்று அவரிடம் கற்பார்கள். அவர் சில நாட்களுக்கு முன் நீ சூதாடுவதை அறிந்து உனக்குப் புத்திமதிகள் கூறினார். அன்றிலிருந்து நீ அவரிடம் செல்வதில்லை. அவருக்கு ஊரில் உள்ள அனைவரும் நண்பர்கள் அவர் ஏவுவதைச் செய்யப்பலர் காத்திருக்கின்றனர். அப்படிப்பட்ட ஒரு பெரியவரின் தொடர்பை விலக்குவது எவ்வளவு துன்பம் தெரியுமா? காவல் துறையினர்

கூடத் தணிகாசலம் ஐயாவுக்கு வேண்டியவர் என்று சொல்லும் குற்றவாளிகளையே அன்புடன் கவனிப்பார். அத்தகைய ஒரு பெரியவரின் நட்பை நீ விலக்கியிருக்கிறாய். அது தீராத துன்பங்கள் பலவற்றைத் தரும் என்று நீ ஏன் உணரவில்லை. அத்துடன் எம்மால் முடியாதவற்றை முடித்துத் தருவேன் என்று கூறுவது எவ்வளவு முட்டாள்த்தனமானது. எமது தொழிற்சாலையின் மேலாளரின் மோட்டார் வண்டியைத் திருத்தித் தருவேன் என்று கூறியுள்ளாய். அது உன்னால் முடியாத காரியம். உனக்கு பழுது பார்க்கத் தெரிந்தாலும் உரிய ஆயுதங்கள் உன்னிடம் இல்லை. அவர் இரண்டு நாட்களாக உன்னைத்தேடியுள்ளார். அங்குள்ள ஒருவன் உனக்குத் திருத்தத் தெரியாதென்று கூறி நகரில் உள்ள ஒருவனைக் கூட்டிவந்து அதைத் திருத்திக்கொடுத்துள்ளான். மேலாளர் உன் மீது கடுமையான கோபம் கொண்டுள்ளார். அதனால் அவரிடஞ்சென்று உண்மையைக் கூறி மன்னிப்புக்கேள். தனக்குத் தெரியாதவற்றைத் தெரியும் என்று கூறி அவமானப்படுவதை விடத் தெரியாது என்று கூறுவது கேவலமானதல்ல. அதனால் விரைவாகச் சென்று கூறு இல்லாவிட்டால் தேவையில்லாத பிரச்சினைகள் பலவும் உண்டாகும். அத்துடன் நீ தேவையில்லாதவர்களிடமெல்லாம் உனது துன்பத்தைக் கூறி உதவி செய்யுமாறு கேட்கிறாய். ஒருவன் தன் மீது அன்பில்லாதவர்களுக்குத் தரதர துன்பங்களைப்பற்றிக் கூறக் கூடாது. கூறினால் அவர்கள் உதவி செய்யாது கேலி செய்வார்கள். அதனால் பிரச்சினைகள் தான் வரும். தணிகாசலம் அவர்கள் உன்னில் உள்ள குறையை உன்னிடம் சொல்லாதிருந்தச் சொல்வார்கள். அவருக்குத் துன்பப்படுவோர் மீது அன்பும் அக்கறையையும் உண்டு. அதனால் அவர் யாரைப்பற்றியும் குறை சொல்லமாட்டார். நேற்று நீ பரமசிவத்திடம் உதவி கேட்டுள்ளாய். அதுவும் உனது மகளின்

கல்விக்காக அவர் சந்தியில் நின்று சொன்னாராம். இவனை நம்பக்கூடாது. பணம் கொடுதால் கொண்டு சென்று சூதாடிவிடுவானென்று இது உனக்குத் தேவையா? அத்துடன் தணிகாசலத்தைப் பற்றிப் பரமசிவத்திற்குக் குறையாகச் சொல்லியுள்ளாய். பெரியவர்களுக்குத் தீமைகள் செய்வதும், அவர்களைப்பற்றி இல்லாதவற்றைக் கூறுவதும் துன்பம். அதனால் இனிமேலாவது திருந்தி நட'' என்றான் நகுலன்.

**27. பெருமை யுடையாரைப் பீடழித்தல் இன்னா**
**கிழமை யுடையார்க் களைந்திடுதல் இன்னா**
**வளமை .லாளர் வனப்பின்னா இன்னா**
**இளமையுள் மூப்புப் புகல்.**

பெரியாரை அவமதித்தல் துன்பம். உரிமை உடையவர்களைப் புறக்கணித்தல் துன்பம். செல்வம் இல்லாதவரது அழகு துன்பம். இளமைப் பருவத்தில் முதுமைக்குரிய அறிகுறிகள் உண்டானது துன்பம்.

அப்போது கதிர்காமநாதனைத் தேடி அவனது தந்தையான சிவநாதன் வந்தார். அவரது முகம் சிவந்திருந்தது. தணிகாசலம் பெரியவர். நல்லவர். எவ்வளவு காலமாக எமக்கு உதவி செய்பவர். அப்படிப் பட்ட பெரியவரைப் பற்றி நீ பரமசிவத்திற்குக் கேவலமாகக் கூறியுள்ளாய். நீ நல்லவற்றைக் கூறினாலும் அவன் நீ கூறாதவற்றையெல்லாம் கூறியிருப்பான். ஆனால் தணிகாசலத்திற்கு எல்லோரைப் பற்றியும் தெரியும். அதனால் அவர் அதைக்கவனத்தில் எடுக்கமாட்டார். தினையளவு உதவி செய்தவர்களையும் நாம் பனையளவு உதவி செய்ததாக நினைத்து அவரோடு அன்போடு இருத்தல் வேண்டும்.

அனுவளவுகூடக் குறை சொல்லக் கூடாது. நீ அவரைப் பற்றிக் கதைத்தபின் அவரைப் பார்க்கவே எனக்கு வெட்கமாக இருக்கிறது. அவளை எப்படி இனி உதவி கேட்காது அவர் உரிமை உள்ளவர். அதனால் ஊரவர் உரிமையுடன் எதையும் கேட்பார்கள். உரிமைஎன்பது பிறப்பால்வருவதில்லை. எவன் அன்பு கொள்கிறானோ, எவன் இரக்கப்படுகிறானோ, எவன் உதவி செய்கிறானோ, அவன் உரிமையுள்ளவன். அவன் குற்றம் செய்தாலும் பொறுத்துக் கொள்ளல் வேண்டும். அவர் உன்னைச் சூதாட வேண்டாம் என்றுதானே சொன்னவர். அதற்காகக் குறைப்படலாமா…? உனது தங்கையின் மகள் அகல்யா. நல்ல அழகி ஊரில் அவளை விட மேலாக அழகி யாரும் இல்லை. ஆனால் செல்லமில்லாததால் திருமணம் தடைப்படுகிறது. இப்போ பொருளுக்குத்தானே மதிப்பு. காகத்தைப்போலபெண் இருந்தாலும் பணமிருந்தால் அவளை மன்மதன் கூட விரும்புவான். உனது சகோதரியின் நிலையை அறிந்த தணிகாசலம் அவளுக்கு உதவி செய்ய முன்வந்துள்ளார். அப்படியானவரைக்குறை கூறியிருக்கிறாய். உனது மூத்த மகனைச் செய்யலாம். அவனுக்கு இருபத்தைந்து வயதில் தலைநரைத்துவிட்டது. அதனால் வேறுயாரும் அவனைச் செய்ய விரும்புகிறார்களில்லை. நான் அகல்யாவைச் செய்யும்படிகேட்டேன் தாய் மறுக்கிறார். திருமண விஷயம் வற்புறுத்தக்கூடாது'' என்று கலங்கினார் சிவநாதன்.

**28. கல்லாதான் ஊரும் கலிமாப் பரிப்(பு)இன்னா**
**வல்லாதான் சொல்லும் உரையின் பயன்இன்னா**
**இல்லார்வாய்ச் சொல்லின் நயம்இன்னா ஆங்கின்னா**
**கல்லாதான் கோட்டி கொளல்.**

பல வீனர்கள் ஏறிச் செல்லும் குதிரைச் சவாரி துன்பம். கல்வியறிவில்லாதவன் சொல்லும் சொல் துன்பம்.

செல்வமில்லாதவனின் எண்ணம் துன்பம். அது போலக் கல்லாதவன் கற்றவர் அசைவில் பேசுதல் துன்பம். பல வீனர்கள் குதிரையில் சவாரி செய்ய விரும்பக் கூடாது. நல்ல திடமான குதிரை பலமுள்ள வீரனையே கதிகளக்கச் செய்யும். அந்தக் குதிரையில் பலவீணன் ஏறிச்சவாரி செய்தால் எப்படி இருக்கும. நீ அதைத்தான் விரும்புகிறாய். உனது தகுதியை முதலில் அளி. அதன் பின் நீ சொல்லப்போகும் சொல்லின் தன்மையை அளி. அதன் பின் தான் செயற்படு. அப்படிச் செயற் பட்டால் துன்பம் ஒருபோதும் வராது. தணிகாசலம் பல முள்ள குதிரை என்பது எல்லோருக்கும் தெரியும். அதனால் அறிவுள்ளவர்களே அவரை பற்றி கதைக்க அஞ்சுவர். அவர் புகழ்ச்சியையும் விரும்புவதில்லை இகழ்ச்சியையும் பெரிதாக மதிப்பதில்லை. பல முள்ளவன் ஐம் புலன்களால் உண்டாகும் உணர்வுகளுக்காக மாட்டான். அதற்காகப் பலவீனர்கள் பல அளளைப் பற்றி கதைக்களாமா? நீ நன்றாக கற்றிருந்தால்தானே இவையெல்லாம் விளங்கும். ஒரு சொல்லுக்கு பல அர்த்தங்கள் உண்டு. அதனால் அறிஞர்கள் நன்கு ஆராய்ந்து உணர்ந்த பின்புதான் பேசுவார்கள். ……….. கள்தான் சொற்களின் அர்த்ததை புரியாது வாய்க்கு வந்தபடி பேசுவார்கள். அதனால் சரும் துன்பங்களைத் தாங்க முடியாது அவதிப்படுவால்கள். கல்வி அறிவு இருத்தல் வேண்டும். இல்லாவிட்டால் நிறைந்த செல்வம் இருத்தல் வேண்டும் இரண்டும் இல்லாதவனின் வாய்ச்சொல்லை மதிக்க மாட்டார்கள். அறிவாளியாக இருந்தாலும் செல்வமில்லாவிட்டால் அவனது அறிவு கரையேராது.

**29. குறியறியான் மாநாகம் ஆட்டுவித்தல் இன்னா**
**தறியறியான் நீரின்கண் பாய்ந்தாடல் இன்னா**
**அறிவறியா மக்கள் பெறல் இன்னா இன்னா**

**செறிவிலான் கேட்ட மறை.**

மந்திரம் கற்காதவன் பாம்பாட்டுதல் துன்பம். குளத்தில் நடப்பட்டிருக்கும் கட்டைகளை அறியாது அதில் குதித்து விளையாடுதல் துன்பம். அறிவற்ற மக்களைப் பெறுதல் துன்பம் இடக்கமில்லாதவன் கேட்ட இரகசியம் துன்பம்.

‘‘மந்திரங்கள் காதலன் பாம்பாட்டக் கூடாது. சென்றவாரம் பாம்பாட்டி ஒருவன் பெரியதொருநாகபாம்பைக்கொண்டு வந்து சந்தியில் மகுடி ஊதி ஆட்டிப்பணம் சம்பாதித்தான். மக்களின் கூக்குரலால் அஞ்சிய நாகபாம்பு ஆடுவதைப் பாத்துக் கொண்டிருந்தவனின் காலைச்சுற்றிவிட்டது. அதனால் மக்கள் பயந்து விட்டனர். பாம்பாட்டி அதைப் பிடிக்கமுடியாது தவித்தான். பாம்பை மயக்கும் மந்திரம் தெரிந்திருந்தால் அதை ஓதியபடி அதைப் பிடித்திருக்கலாம். ஆனால் பாம்பாட்டிக்கு மந்திரம் தெரியவில்லை. கோயிற் குருக்கள் தான் மந்திரம் சொல்லிப் பாம்பை மயக்கப் பாம்பாட்டி அதைப் பிடித்தான். மக்கள் அவனை எச்சரித்து அனுப்பினர். உச்சில் குளம் மிகப்பெரியது. அத்துடன் ஆள்மானது அதில் பலர் மீன்பிடிப்பது வழக்கம். குளிப்போர் கரையில் நின்று குளிப்பார்கள். மீன்பிடிப்பவர்கள் ஆளமான இடங்களில் கட்டைகளை நாட்டியிருப்பார். பரமசிவத்தின் மகன் தரதர நண்பர்களோடு குளத்தில் குதித்து விளையாடினான். கரையில் நின்று குளத்தோர் குளத்தில் கட்டைகள் நடப்பட்டிருக்கும் இடங்களைக் கூறியும் அவர்கள் கேட்கவில்லை. அதனால் ஒருவனுக்கு நட்ட கட்டை வயிற்றில் ஏறிவிட்டது. பின் மக்கள் எல்லோரும் சேர்ந்து அவனை மீட்டெழுந்து வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். அறிவுள்ளவர்கள் எதைச் செய்வதானாலும் நன்கு ஆராய்ந்த பின்பே செய்வர்.

தமக்குத் தெரியாதவற்றைத் தெரிந்தவர்களிடம் கேட்டறிவர். அறிவில்லாதவர்கள் தாம் சிந்தித்தும் நடக்கமாட்டார்கள், தெரிந்தவர்கள் சொல்வதையும் கேட்கமாட்டார்கள். அறிவில்லாத மக்களைப் பெற்ற பெற்றோருக்கு என்றும் துன்பம் தான். நான் அறிவற்ற உன்னைப் பெற்றதால் என்றாலும் துன்பப்படுகிறேன். அத்துடன் அறிவற்ற மக்கள் அடக்கமில்லாதாவர்களுடன் தான் நெருங்கிப்பழகுவார்கள். அவர்களோடுதான் இரகசியம் பேசுவார்கள். அடக்கமில்லாதவனுக்குச் சொல்லக் கூடாத இரகசியத்தைச் சொன்னால் சொன்னவன் பெரும் துன்பப்படுவான்'' என்றார் சிவநாதன்.

**30. நெடுமரம் நீள்கோட்(டு) உயர்பாய்தல் இன்னா**
**கடுஞ்சின வேழத்(து) எதிர்சேறல் இன்னா**
**ஒடுங்கி அர(வு) உறையும் இல்இன்னா இன்னா**
**கடும்புலி வாழும் அதர்.**

உயர்ந்த மரத்தின் கிளையில் இருந்து கீழே குதித்தல் துன்பம். மதங்கொண்ட யானைக்கு அருகே செல்லல் துன்பம். பாம்பு மறைந்து வாழும் வீடு துன்பம் கொடிய புலிகள் வாழும் காட்டு வழியால் செல்வது துன்பம்.

''வாழ்க்கையில் எத்தனை துன்பமோ அதையெல்லாம் இன்பம் என்று நினைத்துச் செய்து பலர் துன்பப்படுகின்றனர். உண்மையை உணராது, நீதியைப் புறக்கணித்துச் செயற்படும் நீ உயர்ந்த மரத்தின் உச்சிக் கிளையில் ஏறி வீம்புக்குக் கீழே

குதிப்பவனைப் போல நடந்து கொள்கிறாய். வாழ்க்கை என்பது உயர்ந்த பல இலட்சியங்களைக் கொண்டது. தாம் வாழ்க்கையில் உயரவேண்டும் என்று நினைப்பவர்கள் தீயவர்களுடன் சேரும் நல்லவர்களும் பன்றியோடு சேர்ந்த பசுவைப்போல மாறிவிடுவார்கள். மதங்கொண்ட யானைக்கு அருகே சென்றால் அது தும்பிக்கையால் தூக்கி காலுக்குக்கீழே போட்டு மிதித்து விடும் என்று தெரிந்தும் செல்பவனைப்போல நீயும் இருக்கிறாய். பரமசிவம் மதங் கொண்ட யானை அவனுக்கு நல்லது கெட்டது தெரியாது. அவன் மதுவைக் குடித்தானேயானால் ஏவி விட்டவர் சொல்வதை விடப் பத்து மடங்கான தீமைகளைச் செய்வான். அதனால் நல்லவர்கள் எவரும் அவன் குடியாமல் இருக்கும் போது கூடச் செல்வதில்லை. நீ செல்கிறாய் என்றால் எதுவோ ஒரு காரணம் இருத்தல் வேண்டும். அவன் கொடிய நச்சுப்பாம்பைப் போன்றவன். பாம்புடன் நீ வாழ்கிறாய். அதை விட அவனை உனது வீட்டில் அண்டி வைத்திருக்கறாய். அதனால் உனது குடும்பத்தினர் பாம்புடன் வாழ்கிறார்கள். பாம்பு மறைந்து வாழும் வீடு துன்பமானது. ஆனால் உனது வீடு பாம்புடன் வாழும் வீடு என்பதை உணர்ந்து கொள். கொடிய புலிகள் வாழும் காட்டு வழியாக ஒருவன் அச்சமின்றிச் செல்லலாம். ஆனால் கொடிய புலியை விடக் கொடியவனான பரமசிவத்துடன் சேர்ந்திருப்பது ஆபத்தானது. இதை உணரவில்லையா, இல்லை உணர்ந்தும் உணராதவன் போல நடந்து கொள்கிறாயா? என்னால் உன்னைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் நீபெரும் ஆபத்தில் மாட்டுப்பட்டுள்ளாய் என்று எனது மனம் சொல்கிறது''. கலங்கினார் சிவநாதன்.

**31. பண்ணமையா யாழின்கீழ்ப் பாடல் பெரிதின்னா**
**எண்ணறியா மாந்தர் ஒழுக்குநாள் கூற்றின்னா**

**மண்ணின் முழுவின் ஒலியின்னா ஆங்கின்னா**
**தண்மை யிலாளர் பகை.**

இசைசேராத யாழின் இசைக்குப் பாடுதல் துன்பம். சோதிப்பதைப் பற்றி அறியாதவர்களுக்கு முகூர்த்த வேளை பார்த்துக் கூறுதல் துன்பம். மர்ச்சனை இல்லாத மத்தளத்தின் ஓசையைக் கேட்பது துன்பம். அவ்வாறு தாட்சன்யம் இல்லாதவரது பகை துன்பம்.

சிவநாதனின் கதையில் இருந்த துயரத்தைப் புரிந்து கொண்ட நகுலன் சொன்னான், கதிர்காமு, நீ நல்ல குடியிற் பிறந்தான். அத்துடன் கற்றவன் ஒரு தீயகுடியிற் பிறந்த கற்காதவன் செய்யும் செயல்களையே நீயும் செய்கிறாய். அதனால் உனது குடிப்பெருமை அழிந்து விடும். யாசைக்கத் தெரியாதவர் இசைக்கும் போது பாடுவதும், கேட்பதும் மிகவும் துன்பமானது. இசை ஒரு பக்கம் போகும, பாட்டு இன்னொரு பக்கம் போகும். இசையும் பாடலும் தேனும் பாலும் போலக் கலந்தால் தான் சுவைக்கும். அதைவிட்டு பாலுக்குள் உப்பிடுவதைப் போன்றதே இசையோடு இனையாத பாட்டின் சுவை. நீ உயர்ந்த குடிமகன். தாழ்ந்த குணமுடையவர்களுடன் சேரக்கூடாது. அதைவிடச் சோதிடத்தைப் பற்றி அறியாதவர்களுக்கு நல்ல நேரம் எடுத்துக்கொடுக்க முடியாது. ஏனென்றால் அவர்களுக்கு நன்மை தீமை தெரியாது. அவர்கள்பேயைக் கண்டது போல மிரள்வார்கள். தீயவர்கள் தீயவற்றையெல்லாம் நன்மையானவை என்று கொள்வதால் அவர்களுக்கு நல்லவற்றை எடுத்துச் சொல்ல முடியாது. நீ சோதிடத்தை அறியாத தீயவன் அல்ல. எல்லாம் அறிந்த நல்லவன். சொல்வதைப் புரிந்து கொள்வாய். உனது பெற்றோரும், உறவினர்களும், நண்பர்களும் நீ கெட்டுப் போவதை

விரும்பாததால் தான் சொல்கிறார்கள். கருஞ்சாத்து இடப்படாத மத்தளத்தின் ஓசை போல நான் கூறுவது எனக்கிருக்கலாம். கருஞ்சாந்திடாத மத்தளத்தின் ஓசையைக் கேட்பது மிகவும் துன்பமானது. அது போலவே எனது பேச்சும் உனக்குத் துன்பத்தைத் தரலாம். இரக்கக்குணமுடையவனின் பகை பெரிதாக எதையும் செய்யாது. ஆனால் இரக்கக் குணம் இல்லாதானது பகை பெருந்தீமைகளைத் தரும். பரமசிவம் காரணமின்றி எவரையும் பகைப்பவன். உதவி செய்யாதவர்களையே தாக்குபவன். அதனால் அவனுடன் பழகக் கூடாது என்பதற்காககத் தான் நல்லவர்கள் விலகியிருக்கிறார்கள். இரக்கமில்லாத பகைவன் வெறிபிடித்த மிருகங்களைவ ிட மோசமானவன்'' என்றான்
நகுலன்.

**32. தன்னைத்தான் போற்றா(து) ஒழுகுதல் நன்குஇன்னா**
**முன்னை உரையார் புறமொழிக் கூற்றின்னா**
**நன்மை யிலாளர் தொடர்ப்பின்னா ஆங்கின்னா**
**தொன்மை யுடையார் கெடல்.**

ஒருவன் தன்னைத் தான் காத்துக்கொள்ளாது நடத்தல் துன்பம். புறங்கூறுதல் துன்பம். நற்குணங்கள் இல்லாதவரது நட்புத்துன்பம். அதுபோல செழிப்பாக வாழ்ந்தவர் வறுமைப்படுவது துன்பம்.

“ கதிர்காமு, நல்ல குடியிற்பிறந்தவர்கள் தம்மைத் தாமே காத்துக்கொள்வார்கள். தன்னைத்தான் காப்பது தான் தர்மம். எப்பொழுதும் பெரியவர்கள், நண்பரகள், உறவினர்கள், நல்லவர்கள் கூட இருக்க மாட்டார்கள். எப்போதும் யாரையும்

கேட்குச் செய்ய முடியாது. அதனால் ஒவ்வொருவரும் தன்னைத் தான் காத்துக் கொள்ளல் வேண்டும். அனுபவங்கள் பாடங்கள், தண்டனைகள் என்பன ஒரு மனிதனைத் திருத்தும். அதற்காக ஒவ்வொரு வேளையிலும் அவை எமக்குதவ மாட்டார். அதனால் ஒரு செயலைச் செய்யுமுன் பலமுறையோசித்தல் வேண்டும். ஒரு செயலைச் செய்வதனால் ஏற்படும் நன்மைதீமைகளை ஆராய்தல் வேண்டும். இவ்வாறு செயற்பட்டால் துன்பங்கள் வராது. சில விடயங்கள் மனதிற்குப் புரியாவிட்டால் அதைத் தான் தோன்றித் தனமாகச் செய்யாது அது பற்றி அறிந்தவர்களிடம் விசாரித்துச் செய்தல் வேண்டும். அடுத்து எந்த ஒரு சொல்லையும் நன்கு ஆராய்ந்த பின்பே சொல்லுதல் வேண்டும். துன்பத்தையும், கஷ்ட்டத்தையும் சினத்தையும் தரக்கூடிய சொற்களை ஒருபோதும் சொல்லக் கூடாது. அதைவிட ஒருவன் இல்லாதவிடத்து அவரைப் பற்றிச் சிறப்பானவற்றைக் கூடச் சொல்லக்கூடாது. ஏனென்றால் சொற்கள் பல்வேறு வகையான அர்தமுடையவை. கேட்பவர் அதைத் தவறாகப் புரிந்து சம்மந்தப்பட்டவருக்குக் கூறினால் அதனால் பெரும் துன்பங்கள் வரும். அதைவிட ஒருவரின் குறை நிறைகளை நேரிற் கூறலாம். அதனால் பெருந்துன்பங்கள் வரமாட்டாது. ஆனால் புறங்கூறினால் அதனால் பல தீமைகள் உருவாகும். அத்துடன் தன்னைத் தான் காத்துக் கொள்ள விரும்புகின்றவன் நல்லவர்கலைத் தவிர வேறு எவரையும் நயப்பராகக் கொள்ள மாட்டான். தீய நண்பர்கள் தமது காரியம் பார்க்க எதையும் செய்வார்கள். பரமசிவம் அப்படியானவன். அதனால் அவனுடன் சேராதே. நீ உனக்கு பிடித்தவன் சிவலிங்கனம். அவன் நல்லவன். நல்ல குடியிற் பிறந்தான். எல்லோரும் இன்பமாக வாழவேண்டும் எனறு நினைப்பவன். ஊருக்கு பல நன்மைகள் செய்தவன். நல்லாயிருந்த அவன் வியாபாரத்தில் பெரும் நட்டமடைந்து விட்டான். அந்தத்

துன்பத்தை தாங்கமுடியாமல் குடிக்கிறான். குடித்தாலும் தீய சொல்களைச் சொல்வதில்லை. அவனைப் பரமசிவத்திற்கு பிடிக்காது. அதனால் பரமசிவம் உன்னை அவனுக்கு எதிராகச் செயற்பட வைக்கிறான். அதைச் சொல்லியும் புரிந்து கொள்கிறானில்லை எனக் கவலைப்பட்டான் நகுலன்.

**33. கள்ளுண்பான் கூறும் கருமப் பொருளின்னா**
**முள்ளுடைக் காட்டின் நடத்தல் நனியின்னா**
**வெள்ளம் படுமாக் கொலையின்னா ஆங்கின்னா**
**கள்ள மனத்தார் தொடர்பு.**

கள் குடிப்பவன் பேசும் பேச்சுத் துன்பம். முட்களை உடைய காட்டில் காலணி இன்றி நடத்தல் துன்பம். வெள்ளத்தில் அகப்பட்ட விலங்கைக் கொல்லுதல் துன்பம். அது போல வஞ்சம் உள்ளோர் துன்பம். கதிர்காமு,உனக்கு புத்தி மதிகள் கூறினால் நீ அதை ஏற்பதில்லை மாராகக் கள்ளுக்குடித்தவன் தன் நிலை மரந்து பேசுவது போலக் கண்டபடி பேசுகிறாய் அதனால் தான் நல்லவரடகள் உன்னைக் கண்டால் விலகிச் செல்கின்றனர். உனக்கு சில வேளைகளில் விசர் பிடித்து விடுகிறது. அதற்கு என்ன காரணம்? கள்ளுக்குடிக்கிறாயா.? நான் உன்னை நேரே கேட்கிரேன். ஆனால் சிலர் தமக்குள் பேசுகிறார்கள். பரமசிவம் நீ கள்ளுக்குடித்தலிட்டுத்தான் தணிகாசலத்தைப் பற்றி அன்று தனக்கு கூறியதாகச் சொல்கிறான். கள் குடித்தவர்களின் பேச்சு கேட்ப்பார்களுக்குப் பெரும் துன்பத்தைத் தரும். வாழ்க்கை என்பது முட்கள் நிறைந்த காட்டு வழி. நீ அதில் காலணியின்றிப் பயணம் செய்கின்றாய். முட்கள் நிறைந்த வாழ்க்கையில் காலணியாக உதவுபவர்களை பெரியவர்கள். நீ காரணமின்றிப் பகைகிறாய். அதனால் பெரும் துன்பங்கள் தான் உண்டாகும்.

வெள்ளத்தில் அகப்பட்ட நுளம்பு போல நீ இருக்கிறாய். வெள்ளத்தில் அகப்பட்ட விலங்கைக் கொல்வது துன்பம். வெள்ளத்தில் அகப்பட்ட விலங்கு உயிர் தப்பப் பெரும் பிரயோசனப் படும். யாராவது வந்தால் அவர்கள் தம்மை காப்பாற்ற வருகிறார்கள் என்றே நினைக்கும். அதைக் கொள்வது துன்பம். அதற்கு இடைஞ்சல் கொடுப்பதும் பாவம். நீ பல்வேரு பட்ட வாழ்க்கை பிரச்சினைகளால் அல்லள் படுகிறாய்.அதை வைத்து உன்னைக் கொண்டு தமது காரியங்களை பார்ப்பிக்க பலர் விரும்புகிறார்கள். அதை நீ உணராத வகைலே இருக்கிறாய். வெள்ளத்தில் அகப்பட்ட விலங்கு தன்னை காக்க யாரோ வருகிறார்கள் என்று நினைக்க வருபவர் அதைக் வஞ்சகமான முறையில் கொன்றால் எப்படி இருக்கும். அது போல உன்னையும் வஞ்சக மனம் படைத்த பரமசிவம் தனது தீய செய்களுக்காகப் பயன் படுத்துகிறான். அது உன்னைக் கொள்ளும் பல தீய செயல்கசைச் சொல்லுகிறது. அதை உனராது அவர்கள் வீசிய வஞ்சக வலையில் நீ சிக்கி விட்டாய் என்றான் நகுலன்.

**34. ஒழுக்கம் இலாளர்க்(கு) உறவுரைத்தல் இன்னா**
**விழுத்தகு நூலும் விழையாதார்க்(கு) இன்னா**
**இழித்த தொழிலவர் நட்பின்னா இன்னா**
**கழிப்புவாய் மண்டிலம் கொட்பு.**

நல்லொலுக்கமில்லாதவர்களைத் தமது உரவினர் என்று சொல்லுதல் துன்பம். நல்ல சொல்களை விரும்பி கட்கா விட்டால் துன்பம். இழிந்தார்களுடைய நட்பு துன்பம் தரும். நல்லோரால் கழிந்து விட்டவரது தொடர்பு துன்பம் தரும். பெரியவர்கள் நல்லொலுக்கமில்லாதவர்களைத் தமது உறவினர் என்று சொல்ல மாட்டார்கள். ஒழுக்கம் தான் ஒரு மனிதனைச் சிறப்பிப்பது;

வாழவிப்பது; மதிப்பை கொடுப்பது. அதனால் தனது பெற்றோராயினும் ஒழுக்கக் குரைவாக வாழ்ந்தால் பெரியோர்களுக்கு மதிப்பு கொடுக்க மாட்டார்கள். தனிகாசலம் அவர்கள் தனது சகோதரியின் குடும்பத்தை மதிப்பதில்லை. அவர்கள் செய்யகட கூடாத வற்றைச் செய்வார்கள். தினமும் அவரின் சகோதரியின் புரிஷன் குடித்து விட்டு அயலவர்களுடன் பிரச்சினைப் படுவான். பலர் அவரின் முகத்திற்கஞ்சி நட வடிக்கை எடுப்பதிர்லை. ஆனால் அவரிடஞ் சொல்லி குறைப்படுவர் இதனால் தன்னை யாரும் கேட்க மாட்டார்கள் என்ற திமிரில் அவன் கண்ட படி நடக்கத் தொடங்கினான். உடனே தனிகாசலம் அவனை காவல் துரையில் பிடித்து கொடுத்து விட்டார். அதனால் அவரது ……….. சகோதரியும் பிள்ளைகளும் தணிகலாசலத்தின் மீது கோபம் கொண்டு அவரது மகளின் திருமனத்திற்குச் சொல்ல வில்லை ஊர்ப் பிரமுகர் ஒருவன் திருமனனாளன்று அவர்களை அழைத்து வருமாறு கூறினார். ‘‘ஐயா, முறைப்படி நான் அவர்களுக்கு அறிவித்துள்ளேன். பிறப்பால் உறவினராலும் தீய சொல்களைச் சொல்போரை உறவினர் எனறு சொல்வது துன்பம். விரும்பினால் வரட்டும் என்றார். பலர் பல நூல்களைத் தாம் கற்றதாகக் கூறுவர். நூல்களை விரும்பி கற்றல் வேண்டும். பிழைப்புகாகச் பற்பவர்கள் அந்நூலில் கூறிய படி நடப்பதில்லை. ஊன் உண்பது பாவம் எனறு நூல்கள் கூறுகின்றன. இனறு படித்த பலர் உயிரைக் கொலை செய்து உண்கிறார்கள். இப்படியான கல்வியும் துன்பமானது. அத்துடன் இழிந்த தொழில்களைச் செய்வோரோடு கேருதல் துன்பமானது. பரம சிவன் ஆடு மாடுகளை வெட்டி பங்கு போட்டு விட்பவன். அவனுடன் நீ நட்பாக அருக்கிறாய். சென்ற மாதம் நோயால் இறந்த ஆட்டுக் கடாவை இரகசிமாக வெட்டி பங்குப் போட்டு மலிந்த விலையில்

அவர்கள் விற்றிருக்கிறார்கள். அதில் நீயும் ஒரு பங்கு வாங்கி உண்டிருக்கிறாய். உயிருள்ள ஆரோக்கியமான விலங்குகளையே உண்பது பாவம். அதனால் நோய்கள் வரும். ஆனால் நீ செத்த மிருகத்தின் உடலை விலை கொடுத்து வாங்கி உண்டுள்ளாய். இது உனக்கு அருவிருப்பை தரவில்லையா? நல்லவர்களால் அழித்து ஒதுக்கப்பட்ட நாட்டிலும்,வீட்டிலும் செனறு உலர்வுவது பெரும் துன்பத்தைத் தரும். எமது கிராமத்தின் வடக்கே இருக்கும் மாவடிக் கிராமத்திற்கு யாரும் செல்வதில்லை அங்கு சட்ட விரோதமாக மதுபானம் காய்ச்சுகிறார்கள். ஆடு,மாடுகளைக் களவெடுப்போர்…….. தான் மிகவும் மலிந்த விலையில் அவற்றை விற்பது வழக்கம். சூதும் விபச்சாரமும் அங்கு தாராளமாக நடை பெறுகிறது. அங்கு நீ பரமசிவத்துடன் சென்று குடிக்கிறாய். சில சமயம் …. மது பானத்தை வாங்கி வந்து ஊரில் உள்ளவர்களுக்குக் கொடுக்கிறாய். இது உனக்கு நல்லதாகத் தெரிகிறதா? என்று கேட்டான் நகுலன்.

**35. எழிலி யுறைநீங்கின் ஈண்டையார்க்(கு) இன்னா**
**குழலின் இனியமர(த்து) ஓசைநன்(கு) இன்னா**
**குழவிகள் உற்ற பிணிஇன்னா இன்னா**
**அழகுடையான் பேதை எனல்.**

மேகம் மழை நீரைச் சொரியா தாயின் உளகத்தாருக்குத் துன்பம். குழல் போன்ற மரம் காற்றில் ஓசை எழுப்புவது துன்பம். குழந்தைகளுக்கு வரும் நோய் துன்பம். அழகுடையவன் அறிவற்றவனாக இருந்தால் துன்பம். …. அழகுள்ள மனிதன் அறிவற்றவனாக இருப்பது துன்பம் என்று பெரியவர்கள் கூறுவார்கள். நீ அழகானவன், பலமுள்ளவன், கற்றவன். ஆனால் அறிவுள்ளவனாக இலடலையே. கல்வி பேறு, அறிவு பேறு

கற்றவர்கள் எல்லோரும் இயற்கையை புரிந்து கொந்து கொள்வதில்லை. இயற்கையை புரிந்த அறிவாளிதான் முழுமையான மனிதன். கல்வியை வயிற்றை நிரப்புவதற்காகத்தான் பலரும் கற்கின்றனர். கல்வி அறிவைத் தரும் அந்த அறிவின் மூலம் இயற்கையை புரிந்து கொள்ளல் வேண்டுடம். இயற்கையை புரிந்துக் கொள்ளாதவர்கள் தான் தாம் கற்ற கல்வியைப் பெரிதாக நினைத்து பலருடனும் முரண்படுகின்றனர். செய்ய கூடாதவற்றை ….. செய்கின்றனர். அழகுடையவன் கட்காவிட்டால் துன்பம். கற்றவன் அதை உனராவிட்டால் துன்பம். குழல் இணிமையான ஓசையைத் தரும். குழலுடன் காற்றுப் புகுவதால் உண்டாகும் ஓசை இனியது. ஆனால் குழலைத் தரும் மரங்கள் பலத்த காற்றால் உண்டாகும் ஓசை துன்பமானது. அது போல் கல்வி அறிவைத் தந்து அறத்தை மேலோங்கச் செய்தல் வேண்டும் அதை விட்டுக் கல்வி ஆணவத்துடன் சேர்ந்து அழிவைத் தந்தால் புயற் காற்று மரங்களிடையே சென்று ஒலி எழுப்புவதைப் போன்றது. சென்ற மாதம் உனது ஆறுமாதக் குழந்தை திடீரென்று அழ ஆரம்பித்தது. அது ஏன் அழுகிறது என்று கணடு பிடிக்க வைத்தியராலும் முடியவில்லை. விருத்தெரிந்த பிள்ளையினால் தனக்கேட்பட்ட நோயைப் பற்றிச் சொல்லும். விருத்தெரியாத பிள்ளைகளுக்கு வரும் நோய் பெரும் துன்பத்தைப் பெற்றோருக்குக் கொடுக்கும். விருத்தெரிந்த நீ விருத்தெரியாத பிள்ளை போலச் செயற்படுகிறாய். உனக்கு அதனால் ஏற்படும் துன்பங்களையும் மறைக்கிறாய். இது எமக்குக் கவலையை அளிக்கிறது. ……… உலகத்தர் துன்பப்படுவர். துன்பப்படும் உலகத்தவர் மனமுருகிப் பிரார்த்தனை செய்தால் மேகம் இரங்கி மழையைத் தரும். நீ செய்யும் கொடுமைகளை உனது பெற்றோருக்கும் நண்பர்களும்,

இணத்தவர்கலும் எடுத்து கூறியும் ந மனம் மாறுகிறாய் இல்லை. அதனால் பெறும் துன்பங்கள்தான் வரும் என்றான் நகுலன்.

**36.பொருளிலான் வேளாண்மை காமுறுதல் இன்னா**
**நெடுமாட நீள்நகர்க் கைத்தின்மை இன்னா**
**வருமனை பார்த்திருந்(து) ஊணின்னா இன்னா**
**கெடும்இடம் கைவிடுவார் நட்பு.**

செல்வம் இல்லாதவன் பிறருக்கு பொருள் கொடுத்து உதவுவது துன்னம். பெரும் பட்டணத்தில் பொருள் இன்றி வாடுதல் துன்பம். பிறரின் வீட்டுக்குச் சென்று காத்திருந்து உணவு பெற்றுண்ணல் துன்பம். வருமையுற்ற போது வருமையுற்றவரின் நட்பை விடுதல் துன்பம். பெரிய மாடங்களை உடைய பட்டணத்திற்குச் சென்று வாழப்போகிறேன் என்று கூறுகிறாய். இது உனது பிறந்த ஊர். இங்குள்ளவர்களில் பலர் உனது உரவினர்கள். சிலர் தெரிந்தவர்கள். சனநடமாட்டம் பெருகியுள்ள பட்டணத்தில் உனக்குத் தெரிந்தவர்கள் யாராவது இருக்கிறார்களா.? அங்கு உனக்கு ஒரு கஷ்டம் நேர்ந்தால் உனக்கு உதவுவது யார். பட்டணத்தில் அடுத்த வீட்டில் வசிப்பவர் யார் என்று அருகில் வசிப்பவர்கள் யார் என்று யாருக்கும் தெரியாது. பட்டணத்தில் விலை வாசிகள் அதிகம். வீட்டு வாடகை அதிகம். அத்துடன் குடிக்கும் நீரில் இருந்து தேவையான பொருட்கள் அனைத்தையும் விலை கொடுத்துத்தான் வாங்க வேண்டும். வீட்டு வாடகை அதிகம். அதனால் பொருள் இல்லாதவர்கள் பட்டணத்தில் வாழ முடியாது. மீறி வாழ்ந்தால் ……… பலவும் ஏற்படும். எடுக்கும் சம்பளத்தில் இங்கு வீடு வாசல் கிணறு தோட்டம் துருவிருந்தும் வாழக் கஷ்ட்டப்படுகிறாய் இந்நிலையில் பட்டணத்தில் எப்படி வாழப்போகிறாய் என்று

கேட்டார் சிவநாதன். ஓ பட்டணத்தில் சென்று வாழ பேகிறீரோ..? இங்கு வாழ முடியாத நீ உலகின் எந்தப் பகுதிக்கும் சென்று வாழ மாட்டாய். தான் வாழ பிச்சைக்காரன் தாணம் செய்ய விரும்பினானாம். அது போல தான் உனது கதை இருக்கிறது. பொருள் உள்ள … தான் தானம் செய்வான். பொருளிள்ளாதவன் தாணம் செய்ய விரும்புவதே துன்பமானது அது போலப் பணமுள்ளவன்தான் பட்டணத்தில் வாழ முடியும். பணமில்லாதவன் தரதர ஊரில் வாழ்வது தான் சிறப்பானது. உனக்கு பல தடவைகள் சொல்லியும் நீ கேட்பதாக இல்லை. உன்னைப் போலத்தான் எனது உறவினர் ஒருவர் இருக்கிறார். நல்ல வசதியானவர். ஆனால் சமைப்பதில்லை. உறவினர்கள், நண்பர்களின் வீடுகளுக்குக் காலையிலே சென்று மதியம் வரை காத்திருந்து உண்பார். சிலர் நான்கு மணிவரை சமைப்பார்கள். அவர் நான்கு மணியானாலும் பசியோடு பொருமையாகக் காத்திருந்து வாங்கி உண்பார். அவரின் மனைவி இறந்து விட்டாள். பிள்ளைகள் இல்லை. அதற்காக இரந்துண்ண வேண்டுமா..? சமைத்து உண்ணலாம். இல்லாவிட்டால் அன்னொருவரிடம் பணம் கொடுத்து வாங்கி உண்ணலாம். இதைச் சொன்னால் கேட்கிறாரில்லை. இது அவரது உறவினர்களுக்குப் பெரும் அவமானமாக உள்ளது. அவரைப் போல உனக்கும் சொல்வது விளங்குவதில்லை இவற்றால் உன்னுடன் பழக எனக்கு விருப்பமில்லை. நீ என்னுடன் படிக்கும் காலத்தில் வசதியில்லையாக இருந்தாய். அத்துடன் உனது பெற்றோர் வசதியானவர்கள். எஉனது மனைவி வீட்டாலும் வசதியானவர்கள். நீ அவற்றை யெல்லாம் அறிந்து விட்டு இப்போ வறியவனாகி விட்டாய். ஒருவன் வறியவனான போது நண்பர்கள் அவனை விட்டு நீங்கினால் அவலுக்கு பெரும் துன்பங்கள் பலவும் வரும்.

அதனால் தான் உன்னைவிட்டுப் பிரியாது இருக்கிறேன். என்றான் நகுலன்.

**37. நறிய மலர்பெரிது நாறாமை இன்னா**
**துறையறியான் நீரிழிந்து போகுதல் இன்னா**
**அறியான் வினாப்படுதல் இன்னாவாங் இன்னா**
**சிறியார்மேற் செற்றங் கொளல்.**

அழகான மலர் வாசமின்றி இருத்தல் துன்பம். ஆழம் அறியாதவன் நீரில் இறங்குதல் துன்பம். நூற்பொருளை அறியாதவனிடம் அப் பொருள் பற்றிக் கேட்டல் துன்பம். அது போலச் சிறியவர்கள் மீது கோபப்படுவது துன்பம்.

‘‘நல்ல குடியிற் பிரந்தவன் அக் குடிக்குறிய பண்புகளைப் இருப்பதைப் போன்றது. மலர்களை அதன் நறுமனத்திற்காகத் தான் மக்கள் விரும்புவார்கள். மல்லிகைப்பூ வெள்ளை நிறமுடையது. அது அழகான பூவும் அல்ல ஆனால் அதனது மணம் உயிர்களைக் கவரும் தன்மை வாய்ந்தது. பெண்கள் அப் பூவை பரித்து மாலை கட்டித் தம் கூந்தலில் சூடுவார்கள். அந்த நறுமணம் தமது கணவர்களை ஈர்க்க வேண்டும் என்பதே பெண்களின் முக்கிய நோக்கமாகும். மல்லிகை சூடிய பெண்களில் ஓர; அழகும் பொலிவும் உண்டு. மல்லிகையைவிட அழகான பூக்கள் பல உள்ளன. அவற்றைப் பெண்கள் பறித்து மாலை கட்டித் தமது கூந்தலில் சூடுவதில்லை. அது போல வாசமில்லாத பூக்களை ….. கடவுளுக்குக் காணிக்கையாகக் கொடுக்கவும் விரும்புவதில்லை. நீ வாச மில்லாத மலரைப் போல எவருக்கும் உதவாத மனிதனாக இருக்கிறாய். அதோடு நீ கற்றவன். நன்மை தீமைகளை அறிந்தவன். செய்யதக்கவை எவை விலக்க வேண்டியவை எவை என தெரிந்தவன். ஆழமறியாது மறியாது நீர்

நிலையில் இறங்கும் அறிவற்றவனைப் போலவே நீ இருக்கிறாய். நேற்று சூதாடிப் பெருந்தொகையான பணத்தை இழந்துள்ளாய். இது ஆழமரியாது நீர்க்குள் இறங்குவதை ஒக்கும். சூதாட்டம் கொடியது என்று தெரிந்தும் ஆடும் உன்னை எச்சரிப்பதாலோ இரத்து கூறுவதாலோ பிரயோசனம் இருப்பதாகத் தெரிவில்லை. ஒருவன் தனக்குத் தெரியாத வற்றைத் தெரிந்தவர்களிடம் தான் கேட்டுத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். நூட் பொருளை தெரியாதவனிடம் நூட் பொருளை கேட்பது போலத் தான் நன்மை தீமைகளை அறியாத உனக்கு உப தேசம் செய்வது எதைச் சொன்னாலும் பேசாமல் இருக்கிறாய். நீ ஏதாவது பேசினால் தான் எம்மால் எதையும் தீர்மானிக்க முடியும். நீ எதையும் பேசாததால் உன்னோடு கோபிக்கவும் முடியவில்லை. ஏதும் அறியாத சிறுவர்கள் தவறு என்று தெரியாது ஒரு செயலைச் செய்தால் பெரியவர்கள் அத்தவரின் தன்மையை விளக்கிக் கூறுவார்களே தவிர கோபிக்க மாட்டார்கள். அப்படி கோபித்தால் அது போபிப்பவருக்குத் தான் துன்பம். இப்போதய நிலையில் நீயும் சிறு பிள்ளைதனமாக நடக்கிறாய். அதனால் உன்னைக் கோபிப்பதால் பயன் இலடலை. என்றான் நகுலன்.

**38. பிறன்மனையாள் பின்னோக்கும் பேதைமை இன்னா**
**மறமிலா மன்னர் செருப்புகுதல் இன்னா**
**வெறும்புறம் வெம்புரவி யேற்றின்னா இன்னா**
**திறனிலான் செய்யும் வினை.**

பிறர் மனைவியை விரும்பும் அறிவின்மை துன்பம். வீர மில்லாத அரசர் போர்க்களத்திற்குச் செல்லும் குதிரைக்குச் சேணமிடாது சவாரி செய்வது துன்பம். திறமையில்லாதவன் செய்யும் செயல் துன்பம். அப்போது அங்கே கதிர்காமநாதன்து

நண்பனான ரமனன் கள்ளைக் குடித்து விட்டுத்தள்ளாடிய படி வந்தான். அவன் கதிர்காம நாதனைக் கண்டதும் சொன்னான்; இன்று அவள் என்னை ஏமாற்றி விட்டாள். தனது கணவன் சந்தேகப்படுகிறானாம். அதனால் இனிமேல் வராதே' என்றாள். நான் எவ்வளவு பணம் கொடுத்திருப்பேன் எல்லாம் வீணாகி விட்டது என்றான். அவன் தனது அயல் வீட்டில் வசிக்கும் ஒரு குடும்பப் பெண்ணுடன் கள்ள உறவு வைத்திருந்தான். நீ அனிமேல் என்னை நண்பன் என்று சொல்லாதே. பிறர் மனைவியை நினைப்பது பாவம். அவளது அழகை ரசிப்பது பாவம். பிறர் மனைவியோடு தொடர்பு வைத்திருந்தால் எவ் வேளையிலும் அஞ்சியபடி இருத்தல் வேண்டும். அத்துடன் புண்ணியம், புகழ், ஆண்டோரது நட்பு, ஆண்மையாவும் பிறரின் மனைவியை விரும்புபவர்களுக்கு இருக்க மாட்டாது. பகையும், பழியும், பாவமும், அச்சமும் தான் … வேளையிலும் கூட இருக்கும். பிறரின் மனைக்குச் செல்லும் போது அச்சம் திரும்பி வரும் போது அச்சம், சுட்டியிருக்கும் போது அச்சம், பிறருக்கு தெரியாமல் காத்து கொள்ளும் அச்சம் என்று எவ் வேலையிலும் இன்பம் இராது. பிறர் கண்டால் குடிக்குப் பழி வரும். அகப்பட்டால் கொலையும் விழும். உனக்கு மனைவி மக்கள் இல்லாவிட்டால் கூட இப் பழியைச் செய்யக் கூடாது. நல்ல நாள் பார்த்து மேளதாளங்களுடன் பிரமாள் மந்திரமோத நடந்தது உனது திருமணம். உனது மனைவி நல்ல அழகி. அப்படியிருக்க நீ ஏன் பிறரின் மனைவி மீது ஆசை கொள்கிறாய்; அளவுக்கதிகமாக காம உணர்ச்சியுள்ளவர்கள் விபச்சாரம் அல்ரது பிறர் மனைவி என்ற கொடிய நாகத்தின் தலையை தம் நாவில் நக்குபவர்கள் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். காமம் தீயிலும் கொடியது. அதை வேறு எவற்றாலும் அனைக்கமுடியாது. அதனால் பிறரின் மனைவியைச் கூடுவது துன்பம் கூடும் போதும்

துன்பம். இந் நிலையில் நீ எப்படி இன்பத்தை அனுபவிப்பாய்? என்று கேட்டான் நகுலன். அதைக் காதில் கேட்டதாகக் கூடக்காட்டிக் கொள்ளாமல் நடந்தான் ரமணன். நான் எவ்வளவோ தரம் கூறிவிட்டேன் கேட்கிறானில்லை.. அகப்பட்டு அடிவாங்கட்டும். ஆன்மை இல்லாதவர்கள் தான் பிறர் மனைவியோடு கூடுவர். அது போல் ஆண்மை இல்லாதவர்கள் போர்களத்திற்குச் சென்றாலும் துன்பம். ஒரு கொலை செய்தாலும் துன்பம். சேணமில்லாது விரைந்து செல்லும் குதிரை மீது பாய்ந்து ஏறுதல் எவ்வளவு துன்பமோ அவ்வளவு துன்பம் பிறர் மனைவியை நினைப்பது. முரட்டு குதிரைத்தன் முதுகில் ஏறியவனை உதைத்து நிலத்தில் விழுத்துவது போல பிறர் மனைவி ………. விருப்புடன் கூடுவால். ஆனால் இகப்பட்டு விட்டால் தான் தப்பிக்க எதையும் செய்வான். அதனால் பாதிக்கப்படுவது ஆண் என்பதை அவன் உணர்கிறான் இல்லை என்று கலங்கினான் கதிர்காம நாதன்.

**39. கொடுக்கும் பொருள்இல்லான் வள்ளன்மை இன்னா**
**கடித்தமைந்த பாக்கினுள் கற்படுதல் இன்னா**
**கொடுத்து விடாமை கவிக்(கு)இன்னா இன்னா**
**மடுத்துழிப் பாடா விடல்.**

கொடுத்ததற்குறிய ஈகைப்பொருள் இல்லாததிருடைய ஈகைத் தன்மை துன்பம். கடித்தற்குறிய பாக்கில் கற்கள் இருத்தல் துன்பம். பாடல் பாடிய புலவனுக்குப் பரிசு கொடுக்காவிட்டால் துன்பம். தடைப்பட்டலிடத்தும் படாதிருத்தல் பாடும் புலவனுக்குத் துன்பம்.

சென்ற வாரம் ஒரு நாள் ரமணனின் மனைவி என்னிடம் சிறு தொகை பணம் கேட்டாள். மகனுக்குக் காய்ச்சலுடன் வலி

வந்து விட்டதென்றும் பட்டணத்தில் உள்ள வைத்தியசாலைக்கு செல்ல வேண்டும் என்று சொன்னாள். ரமணன் தாசி வீடே தஞ்சமெனக் கிடப்பவன். பிள்ளைகள் கல்வியில் சூரர்கள். அதனால் அவள் கேட்கும் போது பணம் கொடுப்பேன். அன்று என்னிடம் பணம் இருக்கவில்லை. ஒரு அவசர தேவைக்காக கேட்ட போது பணம் இல்லையே என்ற கவலை இப்போதும் என்னை வாட்டுகிறது. அண்ணா, நான் கேட்கும் போதெல்லாம் உதவி செய்வீர்கள். இன்று உங்களிடம் பணமில்லாததால் தான் காவல் இருக்கிறீர்கள். நீங்கள் பெரிய …… அதனால் நன்குறை நினைக்க வில்லை என்று சொல்லிவிட்டுச் சென்றான். இருந்தும் அதை நினைத்தால் துன்பமாக இருக்கிறது. எந்நேரமும் அந்த நினைவு தான் எனது மனதை உறுத்துகிறது. நாம் வெற்றிலையோடு சேர்த்து உண்ணும் பாக்கிற்குள் கல்லிருந்து கடிபட்டால் உண்டாகும் துன்பம் இச் சம்பத்தால் எனக்கேற்படுகிறது. இரக்கும் எவர்க்கும் ஈயாது விடல் துன்பமானது. தரதர ஏழ்மைக்காக வந்து புகழ்ந்து பாடும் புலவனுக்குச் சன்மானம் எதுவும் கொடுக்காவிட்டால் எவ்வளவு துன்பம்படுவானோ அவ்வளவு துன்பத்தை ரமணின் மனைவி அடைந்திருப்பாள் என்று நினைக்கிறேன். அதை அவளது கலங்கிய கண்கள் உணர்த்தின என்றான் நகுலன்.

“கவலைப்படாதை பாடும் புலவன் தடைப்படவித்தும் பாடுவான். ஏனென்றால் அவனது குடும்ப வறுமை தீரவேண்டும். தடைப்பட்ட இடத்துப் பாடாது விட்டால் அவனது வறுமை தீராது. அது பெரும் துன்பம். அதுபோல இரப்பவர்கள் ஒருவரிடமில்லாத இடத்து இன்னொருவரிடம் இரப்பர். ரமணனின் மகன் இன்று பாடசாலைக்குச் செல்வதைக் கேட்டேன்”. என்றான் கதிர்காமநாதன்.

**40. அடக்கம் உடையவன் மீளிமை இன்னா;**
**துடக்கம் இலாதவன் தற்செருக்(கு) இன்னா**
**அடைக்கலம் வவ்வுதல் இன்னா ஆங் கின்னா**
**அடக்க அடங்காதார் சொல்.**

அடக்கமுள்ளவன் சினங்கொள்ளல் துன்பம். முயற்சியில்லாதவன் தன்னைப் பெரியவனாக மதித்தல் துன்பம். பிறர் அடைக்கலமாகத் தந்த பொருளைக் கவர்தல் துன்பம். அடக்கமில்லாதவர் சபையில் பேசுதல் துன்பம்.

குடித்து விட்டு வந்து வீட்டில் மனைவியோடு பிரச்சினைப்பட்ட ரமணனை அவனது தந்தை பொன்னம்பலம் பலமாகத் தாக்கிவிட்டார் என்பதைக் கேள்விப்பட்டு நகுலனும் கதிர்காம நாதனும் ரமணனது வீட்டுக்குச் சென்றனர். ரமணனை அயலவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றிருந்தார்.

‘‘பொன்னம்பலம் மிகவும் நல்லவர். எல்லோருடனும் அன்பாகப் பழகுபவர். கேட்பவர்களுக்கெல்லாம் உதவி செய்பவர். யாராவது அவரைப் பேசினாலும் சினங்கொள்ளாது நிலைமையை எடுத்துக் கூறுபவர். அப்படிப்பட்டவர். இன்று கடுங் கோபங்கொண்டிருக்கிறாரென்றால் ஏதோ ஒரு பெரும் பிரச்சினை தான் காரணமாக இருந்திருக்கும்’’ என்றான் கதிர்காமநாதன்.

‘‘ பொறுமையானவர் என்பதால் தான் இவ்வளவு காலமும் பொறுத்தான். வேறொருவரென்றால் ரமணனை. என்றோ தண்டித்திருப்பர். சினங்கொள்ளாதவர் சினங்கொண்டால் பூமி

தாங்காது என்பார்கள். அது தான் நடந்திருக்கிறது, ‘‘அடித்துக் கொலை செய்ய அயலவர்கள் விடவில்லை’’ என்றவராம். அடக்கமுடையவரின் சினம் கட்டுக்கடங்காது என்று பெரியவர்கள் சொல்வதுண்டு. அது தான் நடைபெற்றிருக்கிறது. நல்ல குடியிற் பிறந்தவன் அக்குடியின் மானத்தைப் போக்கினால் கோபம் வரத்தான் செய்யும்’’ என்றான் நகுலன்.

‘‘அத்துடன் ரமணன் எந்தத்தொழிலும் செய்வதில்லை. தகப்பன் வயது சென்றும் குடும்பத்திற்காக உழைக்கிறார். அவர் தேடும் சொத்தைக் அபகரித்துக் குடித்து விட்டுத் தரதர உழைப்பில் தான் குடும்பம் நடக்கிறது என்று திமிருடன் சொன்னால் துன்பம் தான் வரும். அதுவும் இதற்கு ஒரு காரணம். அத்துடன் முன்பு ரமணனன் குடிக்காதிருந்த காலத்தில் ரமணனின் மனைவியின் தகப்பனார் தரதர இறுதிக்காலச் செலவுக்கெனப் பத்துத் பவுன் நகையை ரமணனிடம் அடைக்கலமாகக் கொடுத்து வைத்தவராம். இப்ப அதைக்கேட்க ரமணன் இல்லை என்று கூறிவிட்டானாம். அதுவும் பொன்னம்பலத்திற்குப் பெரும் மன வருத்தம். அத்துடன் ரமணன் பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்தவன். அதனால் தன்னை மிஞ்சியவர் எவருமில்ல்லை என்ற திமிர் அவனுக்கு உண்டு. எமது சனசமூக நிலையத்தில் பௌர்ணமி தினங்களில் பெரியவர்கள் உன்று கூடிக் கலந்துரையாடுவர்கள். ஊர் மக்கள் அதைக்கேட்க ஒன்று கூடுவர். ஒவ்வொரு பௌர்ணமி தினங்களிலும் ரமணன் சனசமூக நிலையத்திற்குச் சென்று அங்கு கூடியிருக்கும் அறிஞர்களுடன் தர்க்கப்படுவான். அவர்கள் கூறும் நல்ல கருத்துக் கூறுவான். அதனால் சென்ற பௌர்ணமி தினத்தில் கருத்தரங்கு நடைபெறவில்லை. அதுவும் பொன்னம்பலத்திற்கு மனவருத்தத்தைக் கொடுத்தது. என்னைக் காணும் வேளைகளில்

அவற்றைச் சொல்லக் கவலைப்படுவார். அந்தக் கவலை தான் இன்று விஸ்வரூபம் எடுத்துள்ளது”. என்றான் கதிர்காமநாதன்.